பக்கங்கள்: 12 விலை: 20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 03 வள்ளுவர் ஆண்டு 2050 ஆனி 03 செவ்வாய்க்கிழமை 18.06.2019 கதிர் 225

### இனி இது ரகசியம் அல்ல!

முன்பு நடைபெறவிருந்து ஒத்தி வைக்கப்பட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் 16ஆவது தேசிய மாநாடு எதிர்வரும் 29, 30ஆம் திகதிகளில் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் என இப்போது அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

கடைசியாகக் பக்கம் 02 »

---

**காலைக்கதிர்** Kalaikkathir

**அன்பு வாசகர்களுக்கு வணக்கம்.**

- கடந்த இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் தினசரி தொடர்ந்து அச்சு ஊடகம் ஊடாகச் சந்தித்து வந்த எமக்கு இது கடைசி நெகிழ்ச்சியான சந்திப்பு.
- தங்கு, தடையின்றி நாள் தோறும் 'காலைக்கதிரின்' 954 இதழ்கள் வெளிவந்துள்ளன.
- எமது ஊடக மார்க்கத்தை நாம் மாற்றியமைக்கத் தீர்மானித்தமையால் இந்த இடைநிறுத்தம்.
- அச்சுப் பிரதி வடிவுக்குப் பதிலாக இனி, தினசரி 'வட்ஸ் - அப்', 'வைபர்', மின்னஞ்சல், காலக்கிரமத்தில் முகப்புத்தகம் ஊடாக சந்திப்போம் - அதுவும் கட்டணம் ஏதுமின்றி.
- ஊடக மார்க்கத்தை மாற்றும் எமது அறிவிப்பு நேற்று வெளியானதும் நெகிழ்ச்சி தரும் இரண்டு விடயங்கள் இடம்பெற்றன.
- ஒன்று - தினசரி 'காலைக்கதிர்' அச்சுப்பிரதியை இனிப் பார்க்க முடியாது என்ற ஆதங்கத்துடன் தொடர்பு கொண்ட பல டசின் அன்பர்களின் மனதை நெருடும் கருத்துக்கள். பெரும்பாலும் வயதானவர்கள், மூத்த தலைமுறையினர். அவர்களின் வேதனையை ஆசுவாசப்படுத்தும் வழி எமக்கு இருக்கவில்லை. புதிய தொழில்நுட்பத்தோடு பயணிக்கும் ஆற்றலற்ற அந்தப் பெரியவர்கள் தரமான, பக்கம் சாராத, நடுநிலை நாளோடு ஒன்றின் தினசரி தரிசனத்தை இழக்கும் வேதனையை அழாத குறையாகப் பகிர்ந்து கொண்டனர். காலமும் சந்தர்ப்பமும் பொருந்தி வந்தால் மீண்டும் அச்சுவாகனம் ஊடாகச் சந்திக்க வாய்ப்புக் கிட்டும் என்று ஆறுதல்படுத்தும் ஒரு சமாதானத்தை அவர்களுக்குக் கூறி வைத்தோம்.

அடுத்தது - இலத்திரனியல் வடிவத்தில் தினசரி 'காலைக்கதிர்' நாளிதழைப் பெற்றுக் கொள்வதற்காகத் தங்களின் தொடர்பு விவரங்களை அனுப்பி வைக்கும் நமது அன்பு வாசகர்களின் எண்ணிக்கை. இது நம்மை மலைக்க வைப்பதாக உள்ளது. இந்த புதிய முயற்சியில் குறுகிய காலத்தில் நாம் எதிர்பார்க்கும் இலக்கை அடைவோம் என்ற புதிய நம்பிக்கையை அது தந்து நிற்கின்றது.

மின் அஞ்சல் ஊடாகக் காலைக்கதிரை பெற விண்ணப்பித்த அனைவருக்கும் இன்று முதலே நாளிதழ் அஞ்சல் செய்யப்படுகின்றது. 'வைபர்', 'வட்ஸ் - அப்' ஊடாக எதிர்பார்ப்போருக்கு பெரும்பாலும் நாளை முதல் அது தவறாமல் கிடைக்கும்.
தினசரி காலைக்கதிரை நீங்கள் பெறுவதற்கு உங்கள் தொடர்பாடல் விவரத்தை

Kalaikkathirpaper@gmail.com

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைத்தால் போதும். தவறாமல் தினசரி அது உங்களுக்குக் கிட்டும்.

எங்கள் அச்சு இதழின் பிரசுரத்துக்கு இந்த இரண்டரை ஆண்டுகளுக்கு மேல் ஒத்துழைத்து உதவிய வாசகர்கள், விளம்பரதாரர்கள், முகவர்கள், நலன்விரும்பிகள், நண்பர்கள், எமது ஊழியர்கள் அனைவருக்கும் எமது மனமுவந்த நன்றிகள்.
**பிரிவோம், சந்திப்போம் வாசகர்களே!**

நன்றி
நிர்வாகி

தொலைபேசி இல.
**021 222 3000**

---

# கூட்டமைப்பின் ஐவர் குழு பேச்சுக்காக டில்லி பறக்கும்!

## விரைவில் கூடி சந்திப்புத் திகதி தீர்மானம்

கொழும்பு, ஜூன் 18

தமிழர் பிரச்சினை குறித்துப் பேச்சு நடத்தப் புதுடில்லி வருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அழைப்பை ஏற்று கூட்டமைப்பின் ஐவர் குழு விரைவில் புதுடில்லிக்குப் பயணிக்கவுள்ளது. பக்கம் 11 »

### பலத்த சவாலுக்கு மத்தியில்

## தமிழரின் இலக்கை அடைந்தே தீருவோம்!

### சுமந்திரன் எம்.பி. சபதம்



யாழ்ப்பாணம், ஜூன் 18

முன்னெப்போதும் இல்லாத பலத்த சவாலை இன்று நாம் எதிர்கொண்டுள்ளோம். இது கஷ்டம் என்று கைவிட்டுவிட்டு நாங்கள் ஓடிவிட முடியாது. நிச்சய பக்கம் 11 »

## வீடு புகுந்த வாள்வெட்டுக் குழு பெற்றோல் குண்டு வீசி அடாவடி

### கொக்குவிலில் நேற்றுப் பகல் துணிகரம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

கொக்குவில் மஞ்சவனப்பதி பகுதியில் வீடொன்றுக்குள் புகுந்த வாள்வெட்டுக் கும்பல், அங்குள்ளவர்களை அச்சுறுத்தும் வகையில் பெற்றோல் குண்டை வீசியும் அங்கிருந்த பெறுமதி பக்கம் 11 »

## பரபரப்புக்கு மத்தியில் இன்று கூடுகின்றது நாடாளுமன்றம்!

கொழும்பு, ஜூன் 18

நாடாளுமன்றம் இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் கூடவுள்ளது.

இன்று முதல் 21 ஆம் திகதிவரை நடைபெறும் ஜூன் மாதத்துக்குரிய 2ஆவது வார சபை அமர்வில் பக்கம் 11 »

## பெறாமகளை வீதியில் கலைத்துச் சென்று கழுத்தறுத்துக் கொன்றார் பெரிய தந்தை!

### பெறாமகனுக்கும் கத்தியால் குத்திவிட்டு கோப்பாய் பொலிஸில் சரணடைந்தார்

யாழ்ப்பாணம், ஜூன் 18

காணிப் பிணக்குக் காரணமாகப் பெரிய தந்தையாரினால் கழுத்து அறுக்கப்பட்ட இளம் பெண் சம்பவ இடத்திலேயே உயிழந்தார். அவரது சகோதரர் வயிற்றில் கத்திக் குத்துக்கு இலக்காகிப் படுகாய பக்கம் 11 »

## வவுணதீவு பொலிஸ் கொலைகளுக்கு பயன்பட்ட மோ. சைக்கிள்கள் சிக்கின!

மட்டக்களப்பு, ஜூன் 18

மட்டக்களப்பு – வவுணதீவில் இரண்டு பொலிஸாரை சுட்டுக் கொலை செய்வதற்குப் பயன்படுத்திய இரு மோட்டர் சைக்கிள்களைப் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

காத்தான்குடி மற்றும் ரிதிதென்னை பகுதிகளில் குற்ற பக்கம் 02 »

## விக்கியுடன் சேர்ந்து செயற்பட முன்னணி எப்போதும் தயார்!

### ஆனால் தமிழர் நலன்களைப் புறந்தள்ளிய தரப்புடன் சேர்ந்து பயணிக்கமுடியாது என்கிறார் கஜேந்திரன்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், ஜூன் 18

வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ்மக்கள் கூட்டணியின் பொதுச்செயலாளருமான நீதியரசர் சி.வீ.விக்கினேஸ்வரனு பக்கம் 11 »

## சு.க. - பெரமுன பேச்சு இழுபறியில் 6 ஆம் சுற்றுச் சந்திப்பு திடீர் ரத்து

கொழும்பு, ஜூன் 18

புதிய அரசியல் கூட்டணி அமைப்பது தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குமிடையில் நேற்று நடைபெறவிருந்த பக்கம் 11 »

## வேளாங்கண்ணி மாதா சொரூபம் விசமிகளினால் வீதியில் உடைப்பு!

### அரியாலையில் அதிகாலை சம்பவம்



யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் வேளாங்கண்ணி மாதா சொரூபம் ஒன்று விசமிகளால் வீதியில் போட்டு உடைக்கப்பட்டுள்ளது. பக்கம் 11 »

## ஹிஸ்புல்லாவுடன் பாசிக்குடா ஹோட்டலில் இருந்தோர் யார்?

### விசாரணைக்கு சவூதியிடம் உதவி கோருகிறது இலங்கை

கொழும்பு, ஜூன் 18

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடந்த பின்னர் பாசிக்குடாவில் உள்ள ஹோட்டல் ஒன்றில் கிழக்கு மாகாண முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லாவுடன் இருந்த சவூதிப் பிரஜை பக்கம் 02 »

## அலரிமாளிகையில் ரணில் அமைச்சர்களுடன் பேச்சு!

கொழும்பு, ஜூன் 18

அலரி மாளிகையில் நேற்றுக்காலை அனைத்து அமைச்சர்களுடனும் முக்கிய சந்திப்பொன்றை நடத்தினார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க. பக்கம் 11 »

# சின்னம், வேட்பாளர் தெரிவுகளில் விட்டுக் கொடுக்கவேமாட்டோம்

## அடித்துக் கூறுகிறார் ரம்புக்வெல



**கொழும்பு, ஜூன் 18**

**எத்தகைய கூட்டணி அமைந்தாலும் ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு விடயங்களில் விட்டுக்கொடுப்பைச் செய்யமாட்டோம். பொது ஜன பெரமுன கட்சியின் சின்னம் மற்றும் எமது ஜனாதிபதி வேட்பாளர் ஆகிய இரண்டு விடயங்களில் ஒருபோதும் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை என்று கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் கெஹெலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில் –

எந்தவொரு தரப்புடனும் பேச்சு நடத்திக் கூட்டணி அமைப்பதற்கு பொதுஜன பெரமுன தயாராகவே இருக்கின்றது. ஆனால் எமது நிபந் தனைகளில் கீழிறங்கி வரமாட்டோம். எந்தவொரு முன்னணியையும் அமைப்பதற்குப் பொது ஜன பெரமுன தயாராகவே இருக்கின்றது. எம்முடன் யாரும் இணைந்து கொள்ளலாம். அதற்கான கதவுகள் திறந்தே காணப்படுகின்றன.

தற்போது சுதந்திரக் கட்சியும் பொதுஜன பெரமுனவும் பரந்துபட்ட கூட்டணியை அமைப்பதற்காகப் பேச்சு நடத்துகின்றது. இதுவரை பல சுற்றுப் பேச்சுக்கள் நடைபெற்றுள்ளன.

ஆனால் இன்னும் முக்கியமான விடயம் குறித்து பேசப்படவில்லை. பொதுவான விடயங்கள் குறித்து மட்டுமே இதுவரை பேசப்பட்டுள்ளன. இதன் பின்னரே முக்கிய விடயங்கள் குறித்து பேசப்படவுள்ளன.

ஆனால் ஒரு விடயத்தில் நாங்கள் மிகவும் கவனமாக இருக்கின்றோம். அதாவது எவ்வாறான கூட்டணிகள் அமைந்தாலும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் இரண்டு விடயங்களில் விட்டுக்கொடுப்பைச் செய்யமாட்டோம். பொதுஜன பெரமுன கட்சியின் சின்னம் மற்றும் எமது ஜனாதிபதி வேட்பாளர் ஆகிய இரண்டு விடயங்களில் ஒருபோதும் விட்டுக்கொடுப்புக்கு இடமில்லை.

இதனை ஏற்றுக்கொண்டு அனைவரும் எம்முடன் கூட்டுச் சேர்வதற்காக பேச்சு நடத்தலாம். சுதந்திரக் கட்சியுடன் நாம் இணைந்து செயற்படுவதற்கான சாத்தியம் அதிகம் இருக்கின்றது. காரணம் இரண்டு தரப்பினரும் பல முக்கிய விடயங்களில் ஒன்றுபட்ட கருத்தைக் கொண்டுள்ளனர். ஆனாலும் சுதந்திரக் கட்சி மட்டுமல்ல எந்தக் கட்சியாக இருந்தாலும் எமது நிபந்தனைகளை நாங்கள் விட்டுக்கொடுக்கமாட்டோம். அதனைப் புரிந்துகொண்டு எம்முடன் யாரும் பேச்சு நடத்தலாம். யாருடனும் கூட்டணி அமைக்கத் தயாராகவே இருக்கின்றோம். எமது கட்சியின் கதவுகள் அதற்காக எப்போதும் திறந்திருக்கும் – என்றார். (ஐ)

### ஹஸ்புல்லாவுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் மூவரை அடையாளம் காண சவூதி அதிகாரிகளிடம் இராஜதந்திர வலையமைப்பின் ஊடாக உதவி கோரப்படவுள்ளதாக பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் ஏற்கனவே பயங்கரவாத விசாரணைப் பிரிவு ஹிஸ்புல்லாவுடம் விசாரணை நடத்தி இருந்தது.

அவருக்கு மேலதிகமாக மேலும் பலரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தனர்.

முன்னதாகச் சவூதியில் கைது செய்யப்பட்ட ஐந்து இலங்கையர்கள் கடந்த வாரம் கொழும்பு அழைத்து வரப்பட்டிருந்தனர். அவர்களை நாடு கடத்த சவூதி ஆரம்பத்தில் மறுத்ததாகவும், பின்னர் அமெரிக்கத் தலையீட்டையடுத்தே அவர்கள் நாடு கடத்த சம்மதித்தனர் எனவும் செய்திகள் வெளியாகியிருந்தன. (ஐ)

# யாழ். பல்கலை பிரதித் துணைவேந்தராக ஸ்ரீசற்குணராசாவை பிரேரிக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ். பல்கலைக்கழகத்தின் பிரதித்துணைவேந்தராக பேராசிரியர் சி. சிறீசற்குணராசாவை நியமிக்கும் பரிந்துரையை பல்கலைக்கழகப் பேரவைக்கு முன்வைக்க தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி தீர்மானித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்தை ஸ்திரமானதாகவும் வினைத்திறனாகவும் முன்னெடுக்கும் வகையில் இந்த நியமனத்தைச் செய்வதற்கான அனுமதியை எதிர்வரும் 29ஆம் திகதி இடம்பெறும் பல்கலைக்கழகப் பேரவையில் தகுதிவாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி கோரவுள்ளார் என்று அறியமுடிகிறது.

யாழ். பல்கலைக்கழக வரலாற்றில் ஒவ்வொரு துணைவேந்தர் தெரிவின்போதும் அதில் போட்டியிடுவோர் தாம் துணைவேந்தராகத் தெரிவானதும் பிரதித் துணைவேந்தர் ஒருவரை முன்மொழிந்து பல்கலைக்கழக நிர்வாகத்தை வினைத்திறனாக முன்னெடுப்போம் என்று பேரவை முன் உரையாற்றுவர்.

எனினும் எந்தவொரு துணைவேந்தரும் பதவிக்கு வந்த பின்னர் பிரதித் துணைவேந்தரை நியமிப்பதற்கான அனுமதியை பேரவையிடம் கோருவதில்லை.

இந்த நிலையில் யாழ். பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் க.கந்தசாமி, தகுதி வாய்ந்த அதிகாரியாக உயர் கல்வி அமைச்சால் நியமிக்கப்பட்டு தனக்கு வழங்கப்பட்ட பதவிக் காலத்தினுள் யாழ். பல்கலைக்கழகத்தில் நிலவும் ஸ்திரமற்ற தன்மைகளைச் சீர்செய்யும் வகையில் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். அந்த வகையில் நிர்வாகத்தை வினைத்திறனாக முன்னெடுக்கும் வகையில் பிரதித் துணைவேந்தர் ஒருவரை நியமிக்கவுள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் விஞ்ஞான பீடாதிபதியும் கடந்த துணைவேந்தர் தெரிவின் போது போட்டியிட்டு பேரவையின் அதிகபட்ச ஆதரவைப்பெற்றவருமான பேராசிரியர் சி.சிறீசற்குணராசாவை பிரதித் துணைவேந்தராக நியமிக்க தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி தீர்மானித்துள்ளார்.

தனது பரிந்துரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பேரவையின் அனுமதிக்காக அவர் சமர்ப்பிக்கவுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவை எதிர்வரும் ஜூன் 29ஆம் திகதி கூடுகின்றது. பேரவையின் அனுமதி கிடைக்கப் பெற்றதும் பிரதித் துணைவேந்தராக பேராசிரியர் சி. சிறீசற்குணராசா பதவியேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ)

# சிக்கியது 30 கிலோ கஞ்சா

யாழ்ப்பாணம், ஜூன் 18

வல்வெட்டித்துறையில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த நிலையில் 30 கிலோ கஞ்சா பொலிஸாரால் நேற்று மீட்கப்பட்டது.

வல்வெட்டிதுறை நகர சபை உறுப்பினர் ஒருவரின் காணிக்குள் கஞ்சா பதுக்கி வைக்கப்பட்டிருந்ததை அவதானித்த அவர், இந்த விடயம் தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியிருந்தார்.



இதனையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த வல்வெட்டித்துறை பொலிஸார் அங்கு பொதியொன்றில் பதுக்கி வைத்திருந்த கஞ்சாவை மீட்டுள்ளனர். (ஐ)

### வவுணதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணை பிரிவினர் அவற்றை மீட்டுள்ளதாக பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் நவம்பர் 29 ஆம் திகதி வவுணதீவு வலையிறவு பாலம் அருகில், பொலிஸ் வீதி சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த பொலிஸார் இருவரை துப்பாக்கியால் சுட்டும் கத்தியால் குத்தியும் கொலை செய்து விட்டு அவர்களிடம் இருந்த இரண்டு கைத்துப்பாக்கிகளையும் சந்தேக நபர்கள் எடுத்துச் சென்றனர்.

இந்தத் தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய சவூதி அரேபியாவில் கைது செய்யப்பட்ட காத்தான்குடியைச் சேர்ந்த முகமது ஆப்தீன் மில்கான் மற்றும் சஹ்ரானின் சாரதியான முகமது ரிப் ஆதம்பாலெப்பை கபூர் ஆகிய இருவரும் பயன்படுத்திய பல்சர் ரக மோட்டர் சைக்கிளைக் காத்தான்குடியிலுள்ள மில்கானின் வீட்டில் வைத்தும், பொலனறுவை – மட்டக்களப்பு எல்லைப் பிரதேச மானரிதிதென்னை பகுதியிலுள்ள ரீப் ஆதம்பாலெப்பை கபூரின் நண்பர் ஒருவரின் வீட்டில் இருந்தும் விசாரணைப் பிரிவினர் கைப்பறியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளை குற்றவிசாரணை பிரிவினர் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஏப்ரல் இறுதியில் இது நடைபெறுவதாக ஏற்பாடாகியிருந்தது.

ஆனால், ஈஸ்டர் ஞாயிறன்று நாட்டில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புத் தாக்குதல்களை அடுத்து ஏற்பட்ட பதற்ற நிலை மற்றும் நெருக்கடிச் சூழல் காரணமாக அது ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

தமிழரசுக் கட்சியின் 15ஆவது தேசிய மாநாடு 2014 செப்ரெம்பரில் வவுனியாவில் நடைபெற்றிருந்தது. சரியாக ஐந்து ஆண்டுகளின் பின்னர் – நீண்ட கால தாமதத்தின் பின்பு – இப்போது அடுத்த மாநாடு நடக்க ஏற்பாடாகியுள்ளது.

கூட்டமைப்புத் தலைவர்களுக்கு புதுடில்லிக்குப் போவதற்கான அழைப்பு எந்நேரமும் வரலாம் என்று பேச்சடிகின்றது.

புதுடில்லி விஜயத்தை ஒட்டி இந்தத் தடவையும் தமிழரசுக் கட்சி மாநாடு தள்ளிப் போய் விடாமல் இருந்தால் சரி.

மாநாட்டு ஏற்பாடுகளையும் சேர்த்துக் கவனிக்க என்ற முஸ்தீபுடன் கட்சியின் பொதுச் செயலாளர் துரைராஜசிங்கம் மட்டக்களப்பிலிருந்து கடந்த வார இறுதியில் யாழ். வந்து நின்றார்.

இனித் தேர்தல் காலம். ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல் என்று வரிசையாக வரப்போகின்றன.

இந்தச் சமயத்தில் கட்சிக்குள் குழப்பம் ஏற்படாமல் தேசிய மாநாட்டை ஒப்பேற்றிப் போட வேண்டும் என்பது கட்சித் தலைமையின் எண்ணம்.

அதனால், கட்சி நிர்வாகிகள் தெரிவில் பெரும் குழப்பம், அதிருப்தி, களேபரம் ஏற்படாமல் புரிந்துணர்வோடு அதனைச் செய்ய வேண்டும் என்று கட்சியின் மூத்த வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

அந்தக் காரணத்தினால், கட்சியின் முக்கிய பதவிகளுக்கு புதிய ஆள்களைக் கொண்டு வந்து, தேவையற்ற குழப்பங்களை ஏற்படுத்தாமல் இருப்பது உகந்தது எனக் கருதப்படுகின்றதாம்.

அதனால், இம்முறை கட்சியின் செயலாளர், தலைவர் பதவிகளில் மாற்றம் ஏதும் இருக்காது என்று கூறப்படுகின்றது.

கட்சியின் முன்னைய மாநாடுகளில் கணக்கு – வழக்கு அறிக்கையே சமர்ப்பிக்காத பொருளாளர் கனகசபாபதி இந்தத் தடவையும் தொடர்ந்து பொருளாளராகத் தெரிவாவாரா தொடருவாரா, இந்தத் தடவையாவது கணக்காய்வு செய்யப்பட்ட கட்சியின் கணக்கறிக்கையை முற்கூட்டியே உறுப்பினர்களுக்குக் கொடுப்பாரா என்பவை எல்லாம் தெரியவில்லை. பொறுத் திருந்து பார்க்கலாம்.

29, 30 ஆம் திகதியில் மாநாட்டில் பங்குபற்றுவதற்கு வரும் தமிழரசின் மூத்த தலைவர் இரா.சம்பந்தன் அடுத்த நாள் யாழ்ப்பாணத்தில் தங்கி நின்று யாழ். மத்திய கல்லூரியில் தந்தை செல்வா நினைவாக அவரது குடும்பத்தினரால் அமைக்கப்பட்ட கலையரங்க மண்டபத் திறப்பு விழாவில் கலந்து கொள்வார்.

கட்சியின் துணைப் பொதுச் செயலாளர்களாக இருக்கும் எம்.ஏ.சுமந்திரன், சீ.வி.கே.சிவஞானம் ஆகிய இருவரில் சிவஞானம் கட்சியின் சிரேஷ்ட உபதலைவராகத் தேர்வாகக் கூடும் எனத் தெரிகின்றது.

கட்சியின் கடைசி மாநாடு வவுனியாயில் நடந்த போதும் பல விடயங்களுக்கும் பொறுப்பான உபகுழுக்களுக்கு தனித்தனி செயலாளர்கள் அறிவிக்கப்பட்டனர். ஆனால் அவர்களில் எவருமே அப்பதவிகளில் செயற்பட்டனர் என்பதற்கு ஆதாரங்கள் இல்லை.

இம்முறையும் அப்படி செயற்படாத உபகுழுக்களுக்கு செயலாளர் பதவிகள் வெறும் அலங்கரிப்புக்கு அறிவிக்கப்படுமோ தெரியவில்லை. எல்லாம் இன்னும் பத்துப் பன்னிரண்டு நாள்களில் தெளிவாகிவிடும். அதுவரைப் பொறுத்திருப்போம்.

- மின்னல் -

# பதில் அமைச்சர்கள் விடயத்தில் ரணில் - மைத்திரி மோதல் உச்சம்!

## பதவி ஏற்கவேண்டாம் எனப் பிரதமர் உத்தரவு



கொழும்பு, ஜுன் 18

ஐ.தே.கவைச் சேர்ந்த பதில் அமைச்சர்களான, லக்கி ஜயவர்த்தன, புத்திக பத்திரன, அனோமா கமகே ஆகியோரை அந்தப் பதவிகளுக்கான கடமைகளை ஏற்றுக் கொள்ளவேண்டாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் மேற்கொள்ளப்பட்ட பதில் அமைச்சர்களின் நியமனம், அரசமைப்பு மீறல் என்பதாலேயே, பிரதமர் இந்த அறிவுறுத்தலை வழங்கியுள்ளார்.

கட்சியின் ஒப்புதலைப் பெறாமல் இந்த நியமனங்களை ஏற்றுக்கொண்டால், எந்தவொரு சூழ்நிலையிலும் அவர்களின் நடவடிக்கை அங்கீகரிக்கப்படும் என்று எதிர்பார்க்கக்கூடாது என்று ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

அமைச்சர்களாக இருந்து பதவி விலகிய ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், கபீர் ஹாசிம் ஆகியோரது இடங்களுக்கே, பதில் அமைச்சர்களாக லக்கி ஜயவர்த்தன, புத்திக பத்திரன, அனோமா கமகே ஆகியோரை ஜனாதிபதி நியமித்திருந்தார்.

எனினும், இந்த நியமனங்கள் குறித்து பிரதமருடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்துரையாடவில்லை என்று ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

பதில் அமைச்சர்களின் நியமனங்கள் சட்டரீதியானது அல்ல என்பதால், அவர்களைப் புதிய பொறுப்புகளில் பணியாற்ற வேண்டாம் என்று பிரதமர் அறிவுறுத்தியுள்ளார்.

இந்த நியமனங்கள் தொடர்பாக, ஜனாதிபதிக்குப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கடிதம் ஒன்றையும் அனுப்பியுள்ளார்.

இன்று அமைச்சரவைக் கூட்டம் நடக்கவுள்ள நிலையில், பதில் அமைச்சர்கள் அதில் பங்கேற்பார்களா என்ற கேள்வி எழுந்துள்ளது. (ஐ)

## பேஸ்புக் ஊடாக களியாட்ட நிகழ்வு; 51 பேர் கைது

முகப்புத்தகத்தின் ஊடாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த களியாட்ட நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்ட 51 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இரத்தினபுரி கலால் திணைக்கள அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலை அடுத்து, பலாங்கொட, பெலிஹுல்ஓய பகுதியில் உள்ள ஹோட்டல் ஒன்று பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டது.

இந்தச்சோதனையின் போது போதைப் பொருள்கள் மற்றும் போதை மாத்திரைகள் வைத்திருந்தமை தொடர்பிலேயே 51 பேர் நேற்றுமுன்தினம் மாலை கைது செய்யப்பட்டனர். (ஐ)

## ஓய்வூதிய முரண்பாடுகளுக்கு ஜுலையில் தீர்வு கிடைக்கும்

கொழும்பு, ஜுன் 18

ஐந்து இலட்சத்திற்கும் மேற்பட்ட ஓய்வுபெற்ற அரச ஊழியர்களின் ஓய்வூதிய முரண்பாடுகளை அடுத்த மாதத்திலிருந்து நீக்கவுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் நிதி அமைச்சு விடுத்துள்ள செய்தி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2015 ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களுக்கான கொடுப்பனவு குறைந்த பட்சம் 2 ஆயிரத்து 800 ரூபா முதல் அதிகபட்சம் 20 ஆயிரம் ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளது.

இதற்கமைய, அலுவலக உதவியாளர் முதலாம் தரத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியம் 2ஆயிரத்து800ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

முகாமைத்துவ உதவியாளர் முதலாம் தரத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான கொடுப்பனவு 5 ஆயிரத்து 200 ரூபாவால் உயர்வடையும்.

ஆசிரியர் சேவையில் முதலாம் தரத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியம் 9 ஆயிரத்து 200 ரூபாவாலும்தாதியர்சேவை முதலாம் தரத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான ஓய்வூதியம் 7 ஆயிரத்து 100 ரூபாவாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

ஓய்வுபெற்ற பொலிஸ் கான்ஸ்டபிள்ஒருவருக்கான ஓய்வூதியம் 4 ஆயிரத்து 200 ரூபாவால் அதிகரிக்கவுள்ளது.

ஓய்வுபெற்றமூத்தநிறைவேற்று அதிகாரிகளுக்கான ஓய்வூதிய கொடுப்பனவு16ஆயிரம்ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளதுடன், 2015 டிசம்பர் 31ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற அமைச்சின் செயலாளர்களுக்கானகொடுப்பனவு20ஆயிரம்ரூபாவால் அதிகரிக்கப்படவுள்ளது.

ஓய்வூதிய திருத்தத்துடன் ஐந்து, 2,015 சுற்றறிக்கைக்கு அமைய 2016 ஆம் ஆண்டும் அதற்குப் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கான ஓய்வூதிய முரண்பாடுகளை நீக்கும் வரை வழங்கப்பட்ட 3 ஆயிரத்து 500 ரூபா இடைக்கால கொடுப்பனவு புதிய ஓய்வூதியத் திட்டத்தில் உள் வாங்கப்படவுள்ளதுடன் 3 ஆயிரத்து 525 ரூபா வாழ்க்கைச்செலவுக்கொடுப்பனவு தொடர்ந்தும் கிடைக்கவுள்ளது.

ஓய்வூதிய கொடுப்பனவை அதிகரிப்பதற்காக அரசு 2019ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 12 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது – என்றுள்ளது. (ஐ)

## முன்னாள் புலிகள் மூவர் மீது வழக்கு!

### 26 படையினரை கொன்ற குற்றச்சாட்டில்

கொழும்பு, ஜுன் 18

போர்க்காலத்தில்நிகழ்ந்த குற்றங்கள் தொடர்பாகப் புலிகள் இயக்க முன்னாள் உறுப்பினர்கள் மூவர் மீது வவுனியா மேல்நீதிமன்றத்தில் குற்றச்சாட்டுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த வழக்கு இந்த மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் விசாரிக்கப்படவுள்ளது.

2009ஆம் ஆண்டு ஜனவரி 26ஆம் திகதி, 18 கடற்படை அதிகாரிகள், 08 இராணுவத்தினர் என விடுதலைப் புலிகளின் தடுப்பில் இருந்த 26 இலங்கைப் படையினர் சுட்டுக் கொல்லப்பட்டு எரிக்கப்பட்டனர். அவர்களின் சடலங்களை அடையாளம் காண முடியவில்லை.

புதுக்குடியிருப்புப் பகுதியில் இருந்த புலிகளின் புலனாய்வு முகாமை கைவிடும் நிலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றிருந்தது.

இந்தப் போர்க்கைதிகள் கொலை தொடர்பான விசாரணைகளை, 2010ஆம் ஆண்டு தீவிரவாத விசாரணைப் பிரிவு ஆரம்பித்திருந்தது.

நீண்ட விசாரணைகளின் பின்னர் இந்தக் கைதிகள் சுடப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என மூன்று சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர்.

தற்போது விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அவர்களுக்கு எதிரான வழக்குகள் வவுனியா மேல்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த வழக்குகள், எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. (ஐ)

## பொதுஜன பெரமுன உறுப்பினர் கைது

கொழும்பு, ஜுன் 18

மிஹிந்தலை பிரதேச சபையின் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மிஹிந்தலை புனித பூமி பகுதி நுழைவாயிலில் நேற்று அதிகாலை இளைஞர்கள் சிலர் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பிலேயே அந்தப் பிரதேச சபை உறுப்பினர் கைது செய்யப்பட்டுள்ளார் என மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியைச் சேர்ந்த நிபுண மதுங்க ரணசிங்க என்ற உறுப்பினரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)


## ஆதனப் பெயர் மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 19, கமால் ஒழுங்கை, யாழ்ப்பாணம் ஆதன இல 53 என்ற இலக்கத்தைக் கொண்ட ஆதனம் A.S. அப்துல் காதர் கைம்பெண் ஆயிசா உம்மா என ஆதனவரிப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கைச் சேர்ந்த அசெனா மரைக்கார் சுல்தான் அப்துல் காதர் கைம்பெண் ஆயிஷா உம்மாவும் சுல்தான் அப்துல் காதர் முகமட் சுல்தான் மொகிதீன் என்பவரும், பிரசித்த நொத்தாரிசு சுல்தான் மொகிதீன் முகமட் அபூபக்கர் முகதாவில் 17.02.1949 ஆம் திகதியிட்டு 5902 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் மீரா முகைதீன் அப்துல் ரஹீம் பெண் முத்து முகமதுநாச்சியாவுக்கு சீதனமாக வழங்கியுள்ளார். குறித்த உறுதியில் தாம் இதன் பின்னகத்தான ஆதனத்திற்கு வழியுருமைச்சட்ட உரித்தின் பிரகாரம் சொந்தமாகியுள்ளதாக பிரகடனப்படுத்திய போதிலும் குறித்த உறுதியில் தாயுறுதிகள் குறிப்பிடப்படவில்லை. பின்னர் பிரசித்த நொத்தாரிசு முகமட் அல்மரிக்கார் முகமட் சுல்தான் முகதாவில் 25.01.1973 ஆம் திகதியிட்டு 5975 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் மீரா மொகதீன் அப்துல் ரஹீம் மற்றும் பெண் முத்துமொகிதீன் நாச்சியா ஆகியோரால் தமது மகள் சாகுல் ஹமீட் அப்துல் ரஹீம் பெண் முகமட் பாயிஷாவிற்கு சீதனமாக வழங்கியுள்ளார். பின்னர் பிரசித்த நொத்தாரிசு தர்மலிங்கம் சோமசுந்தரம் முகதாவில் 07.02.1980 ஆம் ஆண்டு திகதியிட்டு 313 ஆம் இலக்கத்தில், நிறைவேறிய நன்கொடை உறுதிப்படி கமால் ஒழுங்கை பள்ளிவாசல் வீதியைச் சேர்ந்த மீரா முகைதீன் அப்துல் ரஹீம் மற்றும் பெண் முத்துமொகிதீன் நாச்சியா ஆகியோர் தம்மால் 5975ம் இலக்க உறுதி மூலம் சீதனம் வழங்கப்பட்ட மேற்குறித்த முகமட் பாயிஷா பிள்ளைகளின்றி மரணமடைந்து விட்டார் என வெளிப்படுத்தி அப்துல் ரஹீம் முகமட் மன்சூருக்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்கள். பிரசித்த நொத்தாரிசு எம்.எஸ்.பாலீல் முகதாவில் 06.09.2017 ஆம் திகதியிட்டு 2437 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் புத்தளத்தைச் சேர்ந்த அப்துல் ரஹீம் முகமட் மன்சூர் என்பவர் இல 123/11, கிட்டம்புவ வீதி வெள்ளாம்பிட்டியைச் சேர்ந்த மொகிதீன் அப்துல் காதர் முகமட் கியாஸுக்கு குறித்த ஆதனத்தை அறுதியாக வழங்கியுள்ளார்.

ஆதன விபரம்:- வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம்,யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று, வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை J/86, மாநகரசபை யாழ்ப்பாணம். 'மனதேவன் புலம்' நில.பர 13/8 இல், கிழக்குப்பக்கமாக நிந்தப்படுத்தப்பட்ட அரைவாசிக்குளி 12 3/8 இது உத்தரவுபெற்ற நில அளவையாளர் ந.கேதீஸ்வரன் அவர்களின் வரைபட இலக்கம் 4128/27.11.2018 இல் துண்டு 1 எனச்சுட்டப்பட்டு இதன் விஸ்தீரணம் நில.பர 0 குளி 12.67 ஆகும் இதன் எல்லைகள்

**கிழக்கு:-** மத்தனார் சாஹிப் பெண் காதர் உம்மாவினது ஆதனம்.
**வடக்கு:-** கமால் ஒழுங்கை மணல் வீதி.
**தெற்கு:-** வண்ணை வைத்தீஸ்வரன் கோவில் ஆதனம்.
**மேற்கு:-** முகமட் சலி, பெண் முக்குளும்மாவினது ஆதனம்.

தற்போது இவ்வாதனத்தை முகமட் அப்துல் காதர் முகமட் கியாஸ்; தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் எழுத்து மூலம் உரிய ஆவணங்களுடன் அறியத்தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது முகமட் அப்துல் காதர் முகமட் கியாஸ் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**(இம்மானுவல் ஆனல்ட்)**
**முதல்வர்**
**மாநகரசபை**

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000,
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - https://kalaikathir.online

## தவறானதா 19 ஆவது திருத்தம்?

**நாட்டில் கடந்த காலத்தில் ஏற்பட்ட பல நெருக்கடிகள், அரசியல் பிரச்சினைகளுக்கு அரசமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட 19 ஆவது திருத்தமே காரணம் என்று குற்றம் சுமத்தியிருக்கின்றார் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ.**

***"எம்மைப் பழிவாங்கும் நோக்கில் தூர நோக்கமற்ற விதத்தில் நல்லாட்சி அரசு உருவாக்கிய அரசமைப்பின் 19 ஆவது திருத்தமே இன்று பல பிரச்சினைகளுக்கும் காரணியாக அமைந்துள்ளது "*** **- என்றும் அவர் கூறியுள்ளார்.**

**அவர் கூறுகின்ற விடயங்களில் சில அம்சங்கள் உண்மைதான். மறுக்க முடியாதவைதான்.**

**ஆனால், அதற்காக அரசமைப்பின் 19 ஆவது திருத்தத்தை நாட்டுக்கு உகந்ததன்று என்று இலகுவாக யாரும் கூறி விடமுடியாது.**

**மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியை வீழ்த்தி அதிகார பீடத்துக்கு வந்த நல்லாட்சி அரசின் முதல் மற்றும் முழு இலக்காகவும் இருந்தது ராஜபக்ஷக்களை மீண்டும் ஆட்சிப் பீடத்துக்கு வரவிடாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதுதான் என்பதும் முற்றிலும் உண்மையானதே.**

**ராஜபக்ஷக்களை மேலெழும்ப விடக் கூடாது என்பதற்காக பிரதமர் ரணில் தரப்பினால் திட்டமிட்டு வியூகம் வகுத்து நகர்த்தப்பட்ட அரசியல் நடவடிக்கைதான் 19 ஆவது திருத்தத்தின் கணிசமான பகுதிகள் என்பதும் மறுக்க முடியாத விடயம்.**

**அரசமைப்புக்கு கொண்டு வரப்பட்ட 18 ஆவது திருத்தம் மூலம் வாழ்நாள் முழுவதும் தாம் ஜனாதிபதியாக இருக்கும் கனவில் மிதந்தார் மஹிந்த ராஜபக்ஷ.**

**இரண்டு தடவைகளுக்கு மேல் மக்களால் ஒருவர் ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்பட முடியாது என்ற அரசமைப்பின் மூல ஏற்பாட்டை மீண்டும் 19 ஆவது திருத்தத்தில் சேர்ந்தமை மூலம் மஹிந்தர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான வாய்ப்பு இழுத்து மூடப்பட்டது.**

**இரட்டைப் பிரஜாவுரிமை கொண்டோர் நாடாளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தலில் முடியாது என்ற நிலைமையை 19 ஆவது திருத்தத்தில் கொண்டு வந்தமை மூலம் கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பஸில் ராஜபக்ஷ ஆகியோரின் ஜனாதிபதிக் கனவுகளுக்கும் மட்டுப்படுத்தல்கள் ஏற்படுத்தப்பட்டது.**

**அதேபோன்று, ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளருக்கான வயதெல்லையை 35 ஆக உயர்த்தியமை மூலம் வரும் ஜனாதிபதித் தேர்தலில் நாமல் ராஜபக்ஷ போட்டியிட முடியாமை உறுதி செய்யப்பட்டது.**

**இவ்வாறு ராஜபக்ஷக்கள் மீண்டும் ஆட்சிக்கு - அதிகாரத்துக்கு - வருவதை ஏதேனும் வகையில் இடர்ப்படுத்தும் நோக்குடன்தான் 19 ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டது என்பது வெளிப்படையானது.**

**மஹிந்த ராஜபக்ஷவை வீழ்த்தி அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் இணக்கத்துடன் தான் - இசைவுடன்தான் - இன்னும் விரிவாகக் கூறுவதானால் முழு வழிகாட்டலில்தான் - இந்த 19 ஆவது திருத்தமே கொண்டுவரப்பட்டது.**

**இந்த 19 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியமையை தமது பெருமைக்குரிய சாதனை நடவடிக்கையாகக் காட்டி மேடை மேடையாகத் தம்மை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா நீற்றித் திரிந்தமை மறந்து விடக் கூடிய விடயம் அல்ல.**

**உலகத்தில் தன்னுடைய பதவிக் காலத்தையும், நிறைவேற்று அதிகாரத்தையும் தாமாகவே முன்வந்து வெட்டிக் குறைத்த ஒரே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி தாமே என்று அண்மைக்காலம் வரை அவர் மேடைகளில் பிரபலாபித்து வந்தார்.**

**இப்போது, அவருக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் அரசியல் லடாய். சூட்டுக்குள் குழப்பம்.**

**அதனால், அவர் சேராத இடம் சேர்ந்து தன்னைத் தானே இக்கட்டில் - சிக்கலில் - மாட்ட வைத்து விட்டு முழுசுகின்றார்.**

**அதற்கான பழியை 19 ஆவது அரசமைப்புத் திருத்தத்தில் போடுவதில் அர்த்தமில்லை.**

**நிறைவேற்று அதிகார ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டிருந்த கட்டுமட்டில்லாத அதிகாரங்களை வெட்டிக் குறைத்து, சட்ட வாக்கல் சபையான நாடாளுமன்றத்தின் சுயாதிபத்தியத்தையும், சுயாதீனத்தையும் மேலும் பேணும் வகையில் கொண்டு வரப்பட்ட 19 ஆவது திருத்தம், அந்தக் காரணங்களால் மெச்சப்படத்தக்கது.**

**அதிகாரத்தில் இருப்போரின் அரசியல் சுயலாப நகர்வுகளுக்கு அந்தத் திருத்தத்தின் ஏற்பாடு இடைஞ்சலாக இருப்பதற்காக அதைக் குறை கூறுவதில் அர்த்தமில்லை.**

**எதேச்சதிகாரத்துக்கு ஓரளவுக்கேனும் தடைபோட்டிருக்கும் 19 ஆவது திருத்தம் அரசமைப்புச் சட்டப் பாதுகாப்பின் ஒரு முக்கிய அங்கம் என்று மெச்சப்பட வேண்டியதாகும்.**

# கல்முனைப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த கோரி உண்ணாவிரதம்



கல்முனை வடக்கு தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தக் கோரி மட்டக்களப்பு காந்திபூங்கா முன்பாக முற்போக்கு தமிழர் அமைப்பின் ஏற்பாட்டில் அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கல்முனைப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்த வலியுறுத்தி, கல்முனையில் விகாராதிபதி ரன்முத்துகல சங்கரத்ன தேரர் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பித்துள்ள நிலையில், மட்டக்களப்பில் இந்த அடையாள உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இது பற்றி முற்போக்கு தமிழர் அமைப்பின் தலைமை ஒருங்கிணைப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வியாழேந்திரன் கருத்து தெரிவிக்கையில் -

அம்பாறை மாவட்டத்தில் உள்ள எம் தமிழ் மக்களின் இருப்பு நாளுக்கு நாள் கேள்விக்குள்ளாகி வருகிறது. அதில் ஒன்றே கல்முனை வடக்கு பிரதேச செயலகம் தரம் உயர்த்தப்படாமல் இருப்பது. இதற்குக் காரணம் அம்பாறை மாவட்ட முஸ்லிம் அரசியல்வாதிகள். அரசுக்கு ஆதரவு வழங்கும் கூட்டமைப்பை விட அரசு முஸ்லிம் அரசியல்வாதிகளுக்கே முக்கியத்துவம் கொடுக்கிறது. இத்தகைய அரசைத் தாங்கிப் பிடித்துக் கொண்டு கூட்டமைப்பு உள்ளது.

எம்மைப் பொறுத்தவரை எம் மக்களின் இருப்பே முக்கியம். அதற்கு நாம் எவ் வகையிலும் குரல் கொடுக்கவும் போராடவும் தயார். அரசு சாதகமான பதிலைத் தராது விடின் கிழக்கு மாகாணம் முழுவதும் போராட்டத்தை முன்னெடுப்போம் - என்றார்.

# கம்போடியா பறக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால



கொழும்பு, ஜூன் 18

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இம்மாத இறுதியில் கம்போடியாவுக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளார்.

கம்போடிய அரசின் அதிகாரபூர்வ அழைப்பை ஏற்றே ஜனாதிபதி, இரண்டு நாள்கள் பயணமாக நொம் பென்னுக்குச் செல்லவுள்ளார்.

எதிர்வரும் 26ஆம் திகதி அவர் கம்போடியாவுக்குப் புறப்பட்டுச் செல்வார் என்றும், 27ஆம் திகதி வரை அங்கு தங்கியிருப்பார் என்றும் ஜனாதிபதி செயலகத் தகவல்கள் கூறுகின்றன.

கடந்த வாரம் தஜிகஸ்தானுக்குப் பயணம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி, நேற்றுமுன் தினமே நாடு திரும்பியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புத்த பிக்குகளின் கைகளில் பிரச்சினையை ஒப்படைத்துள்ளனர் முஸ்லிம் அமைச்சர்கள்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி. ஆதங்கம்

வவுனியா, ஜூன் 18

முஸ்லிம் அமைச்சர்கள் புத்த பிக்குகளின் கைகளில் பிரச்சினையை ஒப்படைத்துள்ளார்கள். இது ஆபத்தானது எனக் குழுக்களின் பிரதி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் எழுப்பிய கேள்வி ஒன்றுக்கு பதில் அளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அவர்களின் பதவி விலகலை வரவேற்கத்தக்க விடயமாக நான் பார்க்கவில்லை. ஏற்கனவே அமைச்சர் ரிஷாத் பதியுதீன் மீதும், ஆளுநர் ஹிஸ்புல்லா மீதும் அழுத்தங்கள் நாடு பூராகவும் இருந்தன. அப்போது அவர்கள் இருவரும் அல்லது ஒட்டுமொத்தமாக முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலகியிருந்தால் அவர்கள் தங்களது நியாயப்பாட்டை வெளிப்படுத்தும் தன்மையோடு விலகியுள்ளார்கள் என்பதை ஏற்றுக் கொண்டிருக்கலாம்.

ஆனால் இப்போது அவர்கள் இரண்டு தவறைச் செய்துள்ளார்கள். ஒன்று புத்த பிக்குகளின் கைகளில் இந்தப் பிரச்சினையை கொடுத்துள்ளார்கள். சாதாரண சூழலில் விலகாது புத்த பிக்குகள் உண்ணாவிரதம் இருந்த பின்பு தங்களால் நாட்டில் பெரும் பிரச்சினை வரும் என்ற அச்சம் காரணமாகத்தான் அவர்கள் ஒட்டுமொத்தமாக ராஜினாமா செய்துள்ளார்களே தவிர, நாட்டில் நன்மை நடைபெற வேண்டும், நீதிநிலை நாட்டப்படவேண்டும் என்று அவர்கள் செய்யவில்லை என்பது என் குற்றச்சாட்டு.



ஏற்கனவே புத்த மதத்துக்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது என்பதை நாம் குறையாகச் சொல்லி வந்திருக்கின்றோம். தற்போது புத்த பிக்குகள் தங்களுடைய மதம் சார்ந்த செயற்பாடுகளை மறந்து எல்லா விடயங்களிலும் தலையிட்டு அரசியல் ரீதியாகப் பெரும்பான்மை இனத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் செயற்படுகிறார்கள். இந்த நாட்டில் இருக்கின்ற தமிழ், முஸ்லிம், மலையக மக்களின் பிரச்சினைகளில் அவர்களின் ஆதிக்கம் கூடுதலாக இருப்பதற்கான ஒரு சக்தியாக இது மாற்றப்பட்டுள்ளது.

எமது தீர்வு விடயத்திலும் அவர்கள் ஆதிக்கம் செலுத்தும் நிலையை பிக்குகளின் போராட்டத்தின் பின்னரான ஒட்டுமொத்த பதவி விலகல் ஏற்படுத்தியுள்ளது. இதனால் இன்னும் பிரச்சினைகளும், குழப்பங்களும் வரும் - என்றார். (ஐ - 100)

**நாளை**
19.06.2019
புதன்கிழமை
நட்சத்திரம்: பூராடம் பி.ப 2.17 வரை
திதி : துதியை பி.ப 4.08 வரை
அமிர்தம்
இராகுகாலம் : 11.54 - 1.24
சுப நேரம் : 4.24 - 5.54

# தெரிவுக் குழுவிலிருந்து ஹக்கீம் விலகவேண்டும்

## பொதுஜன பெரமுன கோரிக்கை

கொழும்பு, ஜூன் 18

தடைசெய்யப்பட்டுள்ள தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவரும், உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரியுமான சஹ்ரான் ஹாசிமுடன், ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஒப்பந்தம் செய்திருப்பதால், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இருந்து முன்னாள் அமைச்சர் ரவூப் ஹக்கீம் விலக வேண்டுமென ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.

அந்தக் கட்சியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கும்போதே, நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபே குணவர்தன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பில் விசாரணைச் செய்யும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன் சாட்சியமளித்த பதவி விலகியுள்ள ஆளுநர் ஹிஸ்புல்லா, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சஹ்ரானுடன் ஒப்பந்தம் செய்திருந்தது எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கு நிதி விடுவிப்பில் இழுபறி நிலை

## இது இரண்டு வாரங்களில் சீராக்கப்படும் என்கிறார் அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட முகாமையாளர்

கிளிநொச்சி, ஜூன் 18

கிளிநொச்சியில் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினரால் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் வீட்டுத் திட்டங்களுக்கான நிதி விடுப்பில் இழுபறியும், தாமதமும் ஏற்பட்டுள்ளது எனப் பயனாளிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ரி. சுபாஸ்கரனை தொடர்பு கொண்டு வினவியபோது,

கிளிநொச்சி மாவட்டத்தில் 7 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியில் 1,371 வீடுகள் அமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன. இவர்களுக்கான நிதியைப் படிப்படியாக விடுவிப்பதில் தற்காலிக தாமதம் ஒன்று ஏற்பட்டுள்ளது. எங்களின் தலைமை அலுவலகத்திலிருந்து போதுமானநிதிகிடைக்கப்பெறவில்லை. இதனாலேயே இந்தத் தாமதம். இருப்பினும் இரண்டு வாரங்களுக்கு இந்த நிலைமை சீர் செய்யப்பட்டு கட்டம் கட்டமாக வீட்டுத்திட்டப் பயனாளிகளுக்கான நிதி விடுவிப்பு இடம் பெறும். இந்த நிலைமை எல்லா மாவட்டங்களிலும் காணப்படுகிறது. ஆனாலும் இதுவொரு தற்காலிக தாமதமே.

வீட்டுத்திட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ள பயனாளிகள் எவ்வித அச்சமும் இன்றி வீடுகளை அமைக்கும் பணிகளைத் தொடர்ந்தும் முன்னெடுக்கவேண்டும் – என்றார். (ஐ)

# மின்னல் தாக்கத்தில் விவசாயி உயிரிழப்பு

மட்டக்களப்பு, ஜூன் 18

மின்னல் தாக்கியதில் விவசாயியொருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என கரடிய னாறு பொலிஸார் தெரிவித்தனர்.

செங்கலடிச் சந்தை வீதியைச் சேர்ந்த சுந்தரமூர்த்தி ஆனந்தன் (வயது 40) என்பவரே மின்னல் தாக்கத்தில் உயிரிழந்துள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை 5.30 மணியளவில் மட்டக்களப்பு – பதுளை வீதியை அண்டிய பங்குடாவெளி – பெரியவெட்டை எனும் வயல் பிரதேசத்தில் வேலை செய்து கொண்டிருந்த இந்த விவசாயி, மின்னல் தாக்கத்துக்குள்ளாகி அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் உடற்கூறாய்வுப் பரிசோதனைக்காக செங்கலடிப் பிரதேச வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# சமலுக்கு ஆதரவளிக்கும் அஸ்கிரிய மகாநாயக்கர்!

கொழும்பு, ஜூன் 18

நாட்டை சிறந்த முறையில் கட்டியெழுப்பவேண்டுமானால் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்க தேரர் வரகாகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.



கண்டியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற பொசன் நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே ஞானரத்ன தேரர் இதனை குறிப்பிட்டார்.

நாட்டின் செயற்பாடுகள் அனைத்தும் பின்னடைவிலேயே காணப்படுகின்றன. ஆகையால் வினைத்திறனான ஒருவரே ஜனாதிபதியாக வரவேண்டுமென மக்கள் விரும்புகின்றனர். அந்தவகையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் சமல் ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்துவதற்குத் தீர்மானித்துள்ளார் என எமக்குத் தகவல் கிடைத்தது. அது உண்மையில் வரவேற்கத்தக்கதோர் விடயமாகும் எனவும் ஸ்ரீ ஞானரத்ன தேரர் கூறினார்.

இதேவேளை, எமது நாடு ஐக்கிய தேசியக் கட்சியினாலேயே மிகவும் மோசமான நிலைமைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கவலை வெளியிட்டார். (ஐ)

# அமெரிக்காவின் தடை குறித்து புடினுடன் மைத்திரிபால பேச்சு

கொழும்பு, ஜூன் 18

ரஷ்யாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் சில பொருட்களின் மீது, அமெரிக்கா விதித்துள்ள தடைகள் தொடர்பாக, இலங்கை, ரஷ்ய ஜனாதிபதிகள் கலந்துரையாடியுள்ளனர்.



தஜிகிஸ்தான் தலைநகர் துான்பேயில் நடந்த ஐந்தாவது, ஆசியாவில் கலந்துரையாடல் மற்றும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் உச்சி மாநாட்டில், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினும் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டின் பக்க நிகழ்வாகவே இரு நாடுகளின் தலைவர்களும் சந்தித்துப் பேசினர்.

இந்தச் சந்திப்பின் போது, இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட்டதுடன், பல்வேறு பிராந்திய விவகாரங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

ரஷ்யாவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் சில பொருள்களின் மீது, அமெரிக்கா விதித்துள்ள தடைகள் தொடர்பாகவும், இந்த விடயத்தில் எதிர்காலத்தில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் இரண்டு நாடுகளின் தலைவர்களும் ஆராய்ந்தனர்.

அத்துடன் ரஷ்ய ஜனாதிபதியைக் கூடிய விரைவில் இலங்கைக்கு வருமாறும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்தார். (ஐ)

# பிள்ளைகளைப் பாடசாலைக்குச் சேர்க்க இயலாமல் பிள்ளைகளுடன் தாய் தற்கொலை செய்த பெருந்துயர்





கொழும்பு, ஜூன் 18

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் அண்மையில் தனது இரண்டு மகன்களுடன் தற்கொலை செய்துகொண்ட கொட்டாஞ்சேனையைச் சேர்ந்த இளந்தாய், பிள்ளைகள் இருவரையும் பாடசாலைக்குச் சேர்க்க முடியாத கவலையில் துன்புற்றார் என அவரது தாயார் செல்லையா ரீட்டா மரண விசாரணையின்போது தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை தற்கொலை செய்துகொண்ட கொட்டாஞ்சேனை, பரமானந்த மாவத்தையைச் சேர்ந்த ஜெனிட்டா தர்ஷினி இராமையா (வயது 32), அவரது மகன்களான பிரேம்நாத் நோயல் (வயது 12), பிரேம்நாத் டியோன் க்ரிஷ் (வயது – 08) ஆகியோரின் மரண விசாரணைகள், கொழும்பு திடீர் மரண விசாரணை அதிகாரி இரோ தோனி முன்னிலையில் நடைபெற்றன. அதன்போது தற்கொலை செய்த பெண்ணின் தாயார் ரீட்டா மேலும் கூறியுள்ளதாவது: –

எனது மூத்த மகளும் அவரது இரண்டு பிள்ளைகளுமே இறந்துள்ளனர். முதல் குழந்தை 6 மாதமாக இருக்கும்போது மகள் அவரது கணவருடன் வெளிநாடு சென்றார். அங்கு விசா பிரச்சினை ஏற்பட்டதால் இரு பிள்ளைகளுடன் நாடு திரும்பிய மகள் பிள்ளைகளுக்கு பாடசாலை தேடினார்.

பிள்ளைகள் வெளிநாட்டில் ஆங்கிலம் கற்றதால் இங்கு சாதாரணப் பாடசாலைகளில் சேர்க்க முடியவில்லை. முன்னைய பாடசாலைகளின் விடுப்புப் பத்திரம் இல்லாதபடியால் அவர்களைச் சேர்க்க கஷ்டமாகவும் இருந்தது.

அதனால் சர்வதேச பாடசாலைகளை விசாரித்தோம். அங்கு பெருமளவு பணம் கேட்கப்பட்டதால் மகள் மிகவும் கவலையில் இருந்தார். நான் பணம் தேடித் தருவதாகக் கூறினேன்.

கடந்த 13ஆம் திகதி நாங்கள் பாடசாலை ஒன்றுக்குச் சென்றோம். அங்கு பணம் கேட்டார்கள். அவ்வளவு பணம் எங்களிடம் இல்லை. பின்னர் வீட்டுக்கு வந்த மறுநாள் என்னிடம் அம்மா இனி உங்களுக்குத் தொல்லையாக இருக்கமாட்டோம் என்று கூறிய மகள் தேவாலயத்துக்குச் செல்வதாகக் கூறி பிள்ளைகளுடன் சென்றார்.

14ஆம் திகதி பிற்பகல் ஒரு மணிக்கு வீட்டில் இருந்து சென்றார். எனது பேரன்மார் இருவரும் மிகவும் கீழ்ப்படியானவர்கள். அப்பாவிப் பிள்ளைகள். அவர்களுக்கு பாடசாலை கிடைக்கவில்லை என்று மகள் மிகவும் கவலையில் இருந்தார். அந்தக் கவலையில் மகள் இப்படிச் செய்திருக்கக்கூடும் – என்று தாயார் ரீட்டா கண்ணீருடன் சாட்சியமளித்தார்.

பிள்ளைகளுடன் தற்கொலை செய்த ஜெனிட்டா தர்ஷினியின் கணவர் டுபாயிலிருந்து கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் நாடு திரும்பியுள்ளார் எனவும், எனினும், அவர் தனது மனைவி மற்றும் பிள்ளைகள் மீது கவனம் செலுத்துவதில்லை எனவும் பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது. (ஐ)

# மின்தடை

யாழ்ப்பாணம், ஜூன் 18

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை புதன்கிழமை காலை 8.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை–

**வவுனியா பிரதேசத்தில் –**

கோவில்குளம் கிராமம் பிர தேசத்தில் மின்விநியோகம் தடைப் பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

# காணாமற்போன இளைஞர்; இதுவரையும் தகவல் இல்லை

கொழும்பு, ஜூன் 18

மொரட்டுவை – பொல்கொட கங்கையில் படகொன்று கவிழ்ந்ததில் இளைஞரொருவர் காணாமற்போயுள்ளமை தொடர்பில் தொடர்ந்தும் தேடுதல் நடவடிக்கை இடம்பெற்றுவருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த சனிக்கிழமை இரவு 7 மணியளவில் காணாமற்போன இந்த இளைஞரை தேடும் பணிகள், கடற்படையினரின் உதவியுடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், எந்தவிதமான தகவல்களும் இதுவரை கிடைக்கவில்லை யெனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தப் படகில் மூவர் பயணஞ்செய்த நிலையில், இருவர் நீந்தி கரையொதுங்கியுள்ளதுடன், மற்றைய இளைஞரே காணாமற்போயுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikathir



# பீகாரின் முசாபர்பூரில் வேகமாக பரவுகின்றது மூளைக்காய்ச்சல்!

## இதுவரை நூறு பேரின் உயிரைக் காவு கொண்டது அது

பாட்னா,ஜூன்18

பீகார் மாநிலம் முசாபர்பூரில் மூளைக்காய்ச்சல் நோய் வேகமாக பரவி வருகிறது, இதற்குப் பலியானோர் எண்ணிக்கை 100 ஆக அதிகரித்துள் ளது.

பீகார் மாநிலத்தில் குழந்தைகளை தாக்கும் மூளைக்காய்ச்சல் நோய் வேக மாக பரவி வருகிறது. கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து அங்கு நோய் பரவியது. இதில் பாதிக்கப்பட்டு கடந்த மாதம் வரை 11 பேர் உயிரிழந்தி ருந்தனர்.





ஆனால் இப்போது திடீரென இதன் தாக்கம் மேலும் அதிகரித் துள்ளது. கடந்த சில நாள்களாக உயிரிழப்பு அதிகரித்து வருகிறது. கடந்த நான்கு தினங்களுக்கு முன்பு வரை 43 குழந்தைகள் பலியாகி இருந்தனர்.

நோய் பாதிப்பால் 117 பேர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு உள்ளனர். அவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக உள் ளது.

'அக்யூட் என்சபிலிட்டிஸ் சிண்ட் ரோம்' மற்றும் 'ஜப்பான் என்சபிலிட் டிஸ்' என 2 வகையான மூளைக் காய்ச்சல் பரவி இருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதில் முசாபர்பூர் பகுதியில் அக்யூட் என்சபிலிட்டிஸ் சிண்ட் ரோம் மூளைக்காய்ச்சலும், கயா பகுதியில் ஜப்பான் என்சபிலிட்டிஸ் மூளைக்காய்ச்சலும் பரவி இருக் கிறது.

இதைத் தொடர்ந்து நிலை மையை ஆராய மத்திய நிபுணர் குழு அனுப்பி வைக்கப்பட்டது. அவர்கள் பல்வேறு இடங்களுக்கு சென்று ஆய்வு நடத்துவதுடன் சிகிச்சைகளும் மேற்கொண்டு வரு கிறார்கள்.

இதற்கிடையே பீகாரின் முசாபர் பூர் கிருஷ்ணா மருத்துவமனை யில் மத்திய சுகாதாரத்துறை மந் திரி ஹர்ஷ்வர்தன் நேற்றுமுன் தினம் ஆய்வு செய்தார். உரிய நட வடிக்கைகளை எடுக்குமாறு அதி காரிகளுக்கு அவர் வலியுறுத்தினார்.

இந்நிலையில், முசாபர்பூர் மாவட்டத்தில் மூளை காய்ச்சலுக்கு பலியானோர் எண்ணிக்கை 100 ஆக உயர்ந்துள்ளது. இதுவரை 100 பேர் பலியாகியுள்ளனர் என ஸ்ரீ கிருஷ்ணா மருத்துவமனை கண்காணிப் பாளர் சுனில் குமார் தகவல் தெரிவித்துள்ளார்.

# நாடாளுமன்றில் எதிர்க் கட்சியினரை மதிப்போம் என்கிறார் நரேந்திர மோடி



புதுடில்லி,ஜூன்18

குறைந்த எண்ணிக் கையில் எதிர்க்கட்சியி னர் இருந்தாலும் அவர் களின் உணர்வை மதிப்போம். வலுவான எதிர்க்கட்சி ஆரோக்கிய ஜனநாயகத்திற்கு அவ சியம் என புதிய நாடாளு மன்றத்தின் முதல் கூட்டத்திற்கு நேற்று வருகை தந்த பிரதமர் மோடி நாடாளுமன்ற வளாகத்தில் நிருபர் களிடம் பேசுகையில் குறிப்பிட்டார்.

இந்த நாடாளு மன்றம் சுமுகமாக நடக்க அனைவரும் ஒத்துழைக்க வேண் டும். அவைக்கு வரும் புதிய நண்பர்களை வரவேற்கிறேன். மக் களுக்கு சேவையாற்ற வேண்டும் என்ற அவர் களின் கனவுகளையும், உணர்வையும் நான் அறிவேன்.

புதிய உறுப்பினர் கள், புதிய கனவுகளை இந்த லோக்சபாவில் காண்கிறோம்.

சுதந்திர இந்தியா வில் அதிக பெண்கள் உறுப்பினர்கள் தற் போது வந்துள்ளனர். ஏழைகளின் எதிர் பார்ப்பை நிறைவேற்று பவர்களாக உறுப்பி னர்கள் இருக்க வேண் டும். ஏழைகள் தேவையை நிறைவேற் றுவதே எங்களின் நோக் கம். மக்களின் கனவு களை நிறைவேற்றவும் அவர்களின் வளர்ச்சிக் காகவும் உழைக்க வுள்ளோம்.

மக்கள் நலன் சார்ந்த பிரச்சினைகள் ஆக்க பூர்வமாக விவாதிக்கப் பட வேண்டும். எதிர்க் கட்சியினர் நாடாளு மன்ற நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும்.

ஜனநாயகத்தில் எதிர்கட்சி மிகவும் முக்கியமானது. அதன் மதிப்பை நாங்கள் அறிவோம். வலுவான எதிர்க்கட்சி ஆரோக்கிய மான ஜனநாயகத்திற்கு அவசியம். குறைவான எண்ணிக்கையில் எதிர்க்கட்சியினர் இருந் தாலும் அது ஒரு பொருட் டல்ல. அவர்களின் உணர்வை மதிப்போம். - இவ்வாறு மோடி கூறினார்.

(உ)

# சுவிஸ் வங்கியில் பணம் பதுக்கியுள்ள 50 இந்தியர் பற்றிய விவரம் டில்லிக்கு!

பேர்ன்,ஜூன் 18

சுவிஸ் வங்கியில் பணம் பதுக்கி யுள்ள இந்தியர்கள் 50 பேர் பற்றிய விவரங்களை இந்தியாவுக்கு வழங்க அந்த நாடு நடவடிக்கை எடுத்து உள்ளது எனச் செய்திகள் வெளி யாகியுள்ளன.

பல்வேறு உலக நாடுகளைச் சேர்ந்த கோடீஸ்வரர்கள் தங்கள் சொந்த நாட்டுக்கு வரி செலுத்துவ தில் இருந்து தப்புவதற்காக சுவிற்ஸர் லாந்தில் உள்ள வங்கிகளில் கோடிக் கணக்கில் கறுப்பு பணம் பதுக்கி வருகின்றனர். இவர்களை பற்றிய விவரங்களை அந்த நாட்டு அரசு பாதுகாத்து வருவதால், வரி ஏய்ப்பில் ஈடுபடுவோரின் சொர்க்கபுரியாக சுவிற்ஸர்லாந்து விளங்கி வருகி றது.

இத்தகைய சுவிஸ் வங்கிகளில் இந்தியாவை சேர்ந்த பெரும் செல் வந்தர்கள் பலரும் கோடிக்கணக் கில் கறுப்பு பணத்தை சேமித்து உள் ளனர். இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் தடையாக விளங்கிவருகிறது. இந்தப் பணத்தை மீட்டு கொண்டு வருவதும் சிரம மாக உள்ளது.

எனவே இந்த வரி ஏய்ப்பாளர் களுக்கு கடிவாளம் போடும் வகை யில் முந்தைய பா.ஜனதா அரசு பல்வேறு நடவடிக்கைகளை மேற் கொண்டது.

குறிப்பாக சுவிஸ் வங்கிகளில் பணம் பதுக்கியோர் குறித்து விசா ரணை நடத்த சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்ததுடன், அவர் களின் விவரங்களை வழங்குமாறு சுவிற்ஸர்லாந்து அரசுடனும் மத் திய அரசு பேச்சு நடத்தியது.

அப்படி பல கட்ட பேச்சு நடத்தி யதன் பலனாக சுவிற்ஸர்லாந்து அரசு இறங்கி வந்தது. தனது நாட்டு வங்கிகளில் பணம் பதுக்கிய இந்தி யர்களின் விவரங்களை வழங்க ஒப்புதல் அளித்தது. பின்னர் இது தொடர்பாக இரு நாடுகளுக்கு இடையே ஒப்பந்தமும் கையெழுத் தானது.

இதைத்தொடர்ந்து சுவிஸ் வங்கிகளில் பணம் பதுக்கியுள்ள இந்தியர்களின் விவரங்களை வழங் கும் நடவடிக்கையில் அந்த நாடு இறங்கி உள்ளது. அதன்படி அங்கு பணம் பதுக்கியிருக்கும் சுமார் 50 பேரின் விவரங்களை விரைவில் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. இது தொடர்பாக அவர்க ளுக்கு சுவிற்ஸர்லாந்து அரசு சமீபத்தில் நோட்டீஸ் அனுப்பி யது.

அப்போது, தங்களை பற்றிய விவரங்களை மத்திய அரசுக்கு வழங்குவதற்கு ஆட்சேபம் தெரி வித்து அவர்கள் மேல்முறையீடு செய்தனர். ஆனால் அதற்கு போது மான ஆவணங்களை அவர்கள் தாக்கல் செய்யவில்லை எனக்கூறி அவற்றை சுவிற்ஸர்லாந்து அரசு தள்ளுபடி செய்து விட்டது. எனவே அந்த 50 பேர் பற்றிய விவரங்கள் விரைவில் இந்தியாவுக்கு கிடைக்கும் எனத் தெரிகிறது.

இந்த 50 தனிநபர்களும் பல் வேறு நிறுவனங்களுடன் (போலி நிறுவனங்கள் உள்பட) தொடர்பு டைய வியாபாரிகள் என கூறப்படு கிறது. குறிப்பாக ரியல் எஸ்டேட், நிதி சேவை, தொழில்நுட்பம் மற்றும் தொலைதொடர்பு, வீடு அலங்காரம், ஜவுளி, என்ஜினீயரிங் பொருள்கள், ஆபரண கற்கள் மற்றும் ஜுவல்லரி துறைகளைச் சேர்ந்த வியாபாரிகள் எனத் தெரியவந்துள்ளது.

# மனைவி, மகன்மார் கண்முன்னே கடலில் மூழ்கிய இந்தியர் மரணம்

## டுபாய்க் கடலில் நடந்த பரிதாபம்

டுபாய்,ஜூன்18

டுபாயில் மனைவி, மகன் மார் கண்முன்னே கடலில் மூழ்கிய இந்தியர் பரிதாபமாக பலியானார்.

ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள டுபாயில் மனைவி மற் றும் 3 மகன்களுடன் வாழ்ந்து வந்தவர் ஜான் பிரீட்டம் பவுல் (வயது 40). இந்தியரான இவர் பெங்களூருவைச் சேர்ந்தவர். டுபாயில் உள்ள தனியார் வானொலியில் விற்பனை பிரி வுத் தலைவராக பணியாற்றி வந்த ஜான் பிரீட்டம் பவுல், 14 ஆண்டுகளுக்கும் மேலாக அங்கு வசித்து வந்துள்ளார். இந்த நிலையில், ஜான் பிரீட்டம் பவுலின் சகோதரி மற்றும் அவ ரது கணவர் டுபாய்க்கு சுற்றுலா சென்றனர். இதையொட்டி பிரீட் டம் பவுல் தனது மனைவி, மகன் கள் மற்றும் உறவினர்களோடு, புகழ்பெற்ற ஜுமைரா கடற் கரைக்கு சனியன்று சென்றார்.

அங்கு ஜான் பிரீட்டம் பவுல் கடலில் உற்சாகமாக குளித்துக் கொண்டிருந்தார். அப்போது, திடீரென நீரில் மூழ்கினார். சற்று நேரத்தில் மயங்கிய நிலையில் அவர் நீரில் மிதந்தார். இதை கண்டு அதிர்ச்சியடைந்த அவரது மனைவி மற்றும் உறவினர்கள்



அவரை மீட்டு அம்புலன்ஸில் மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர்.

அங்கு அவரை பரிசோதித்த டாக்டர்கள் அவர் ஏற்கனவே இறந்துவிட்டார் எனத் தெரிவித் தனர். அவருக்கு மாரடைப்பு ஏற்பட்டதால், நீரில் மூழ்கி இறந் தார் என டாக்டர்கள் கூறினர். பிரேதபரிசோதனைக்கு பிறகு ஜான் பிரீட்டம் பவுலின் உடல் அவரது மனைவியிடம் ஒப்ப டைக்கப்பட்டது.

இறுதி சடங்குக்காக அவரது உடலை சொந்த ஊரான பெங் களூருக்கு கொண்டுவருவதற் கான ஏற்பாடுகள் நடந்து வரு கின்றன.

## பாக். உளவு அமைப்புக்கு புதிய தலைவர் நியமனம்

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐயின் புதிய தலைவராக லெப்டினன்ட் ஜெனரல் ஃபயிஸ்ஹமீத் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தியாவில் இருந்து பிரிந்து சென்றது முதல் பாகிஸ்தானை இராணுவத் தளபதிகளே பெரும்பாலும் ஆட்சி செய்து வருகின்றனர். இதற்கு பெரும்பாலும் அந்நாட்டின் உளவு அமைப்பான ஐ.எஸ். ஐ. காரணமாக உள்ளது.



எல்லை தாண்டிய தீவிரவாதம் மற்றும் இந்தியா மீதான தாக்குதல்களுக்கு ஐ.எஸ்.ஐ. அமைப்பே காரணம் என்று கூறப்பட்டு வரும் நிலையில், அதன் தலைவராக ஃபயிஸ் ஹமீத்தை பாகிஸ்தான் அரசு நியமித்துள்ளது.

இவர் பொறுப்பேற்ற உடன், புல்வாமாவில் மீண்டும் தாக்குதல் நடத்த தீவிரவாதிகள் திட்டமிட்டிருக்கின்றனர் என எச்சரிக்கை விடுத்துள்ளார் என்று செய்திகள் வெளியாகின.

# வெடிக்கத் தயார் நிலையில் 2 ஆயிரம் அணுகுண்டுகள்!

ஸ்டொக்ஹோம்,ஜுன்18

உலகின் பலநாடுகள் அணு ஆயுததயாரிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்ட நிலையில் பாகிஸ்தான், சீனா, வடகொரியா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் அணுகுண்டுகளை தயாரிப்பில் தீவிரம் காட்டி வருகின்றன.

ஸ்வீடன் நாட்டின் தலைநகரான ஸ்டொக்ஹோம் நகரில் சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் இயங்கி வருகிறது. உலகளாவிய அளவில் அணு ஆயுத உற்பத்தி மற்றும் கையிருப்பு தொடர்பான கையேடுகளை இந்த அமைப்பு ஆண்டு தோறும் வெளியிடுகிறது.

அவ்வகையில், இந்த (2019) ஆண்டுக்கான கையேடு நேற்று வெளியிடப்பட்டது. இந்த கையேட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள விவரங்களின்படி சர்வதேச அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்துக்கு கட்டுப்பட்ட வகையில் இந்தியாவின் அணு குண்டுகள் கையிருப்பு கடந்த 2018 ஆம் ஆண்டில் இருந்த 130-140 என்ற அதே அளவில்தான் இப்போதும் உள்ளது.

ஆனால், பாகிஸ்தான், சீனா, வட கொரியா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் அணுகுண்டுகளை தயாரிப்பில் தீவிரம் காட்டி வருகின்றன என்பது தெரியவந்துள்ளது.

அதேவேளையில், கடந்த ஆண்டு 280 அணுகுண்டுகளை வைத்திருந்த சீனா இந்த ஆண்டில் 290 அணுகுண்டுகளை வைத்துள்ளது. கடந்த ஆண்டு 140-150 அணுகுண்டுகளை வைத்திருந்த பாகிஸ்தானின் கையிருப்பும் 160-ஐ இப்போது எட்டியுள்ளது.

இஸ்ரேலிடம் உள்ள அணுகுண்டுகளின் எண்ணிக்கை 80-ல் இருந்து 90 ஆகவும், கடந்த ஆண்டு 10-20 அணுகுண்டுகளை மட்டுமே வைத்திருந்த வட கொரியாவின் கையிருப்பு தற்போது 30 ஆக உயர்ந்துள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு நிலைவரப்படி, அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், சீனா, இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல், வட கொரியா ஆகிய 9 நாடுகள் ஒட்டுமொத்தமாக 14,465 அணுகுண்டுகளை வைத்திருந்தன.



ஆனால், இந்த ஆண்டில் அந்த எண்ணிக்கையில் 600 குறைந்து, மேற்கண்டநாடுகள்வைத்திருக்கும்அணுகுண்டுகளின் எண்ணிக்கை 13,865 ஆக தற்போது உள்ளது. இவற்றில் 3,750 அணு ஆயுதங்கள் படைகள் வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இந்த எண்ணிக்கையில் சுமார் 2 ஆயிரம் அணு ஆயுதங்கள் எப்போதும் இயங்கும் நிலையில் அதிமுக்கியத்துவம் வாய்ந்த தயார்நிலையில் வைக்கப்பட்டுள்ளன என சர்வதேச அமைதி ஆராய்ச்சி நிறுவனம் இன்று வெளியிட்ட கையேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(உ)

## சோமாலியாவில் அதிபர் மாளிகை அருகே நடந்த கார் குண்டுவெடிப்பில் 11 பேர் பலி!

மொகாடிஸ்ஸூ,ஜுன்18

சோமாலியாவில் அதிபர் மாளிகை அருகே கார் நடந்த குண்டுவெடிப்பில் 11 பேர் பலியாயினர்.

சோமாலியாவில் அல்-கொய்தாவின் ஆதரவுபெற்ற அல்-பாப் பயங்கரவாதிகள் ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள். இவர்கள் அங்கு பொலிஸார், பாதுகாப்புபடை வீரர்கள் மற்றும் வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளை குறிவைத்துப் பயங்கரவாதத் தாக்குதல்களை அரங்கேற்றி வருகின்றனர்.

இந்த நிலையில், தலைநகர் மொகாடிஸ்ஸூவில் அதிபர் மாளிகைக்கு அருகே உள்ள பொலிஸ் சோதனைச் சாவடியில் பொலிஸார் வழக்கமான பணிகளில் ஈடுபட்டிருந்தனர். அப்போது தீவிரவாதிகள் வெடிகுண்டுகள் நிரப்பிய காரைச் செலுத்தி வந்து, பொலிஸ் சோதனைச் சாவடி முன்பு நிறுத்தி வெடிக்கச் செய்தனர்.



குண்டுகள் பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியதில் அந்தப் பகுதியே அதிர்ந்தது. அங்கு நிறுத்தப்பட்டிருந்த வாகனங்கள் அனைத்தும் தீக்கிரையாகின.

இதனால் கரும்புகை மண்டலம் உருவானது. குண்டுவெடிப்பில் சிக்கி 9 பேர் சம்பவ இடத்திலேயே உடல்சிதறி உயிர் இழந்தனர். மேலும் 25 பேர் பலத்த காயம் அடைந்தனர்.

இந்த குண்டுவெடிப்பு நடந்த சில மணி நேரத்துக்குள்ளாக மொகாதீசுவில் உள்ள சர்வதேச விமான நிலையத்துக்கு செல்லும் பரபரப்பான சாலையில் மற்றொரு கார் வெடிகுண்டு வெடித்தது. இதில் 2 பேர் சம்பவ இடத்திலேயே பலியாகினர். இந்த இரட்டைக் கார் குண்டு வெடிப்பு தாக்குதலுக்கு அல்-பாப் பயங்கரவாதிகள் பொறுப்பு ஏற்றுள்ளனர்.

## நீச்சல் வீரரை இழுத்துச் செல்ல விடாது முயற்சித்த ஒக்டோபஸ்

### ஜப்பான் கடலில் சம்பவம்

ஜப்பானில் ஆழ்கடல் நீச்சல் வீரர் ஒருவரை ஒக்டோபஸ் (நட்சத்திர மீன்) ஒன்று இழுத்துச் செல்ல முயன்ற காட்சிகள் வெளியாகி உள்ளன.

ஜப்பான் கார்ரொ தீபகற்ப பகுதியில் ஆழ்கடலுக்குள் வீரர்கள் சிலர் ஆய்வுப் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது பெரிய ஒக்டோபஸ் ஒன்று வீரர் ஒருவரை பிடித்து இழுத்துப் பார்த்தது. ஆனால் அந்த வீரர் தொடர்ந்து நீந்திச் சென்று கொண்டிருந்தார்.

ஆனாலும் ஒக்டோபஸும் விடாப்பிடியாக நீச்சல் வீரரின் கால்களைப் பிடித்துக் கொண்டு மீண்டும் இழுக்க முயன்றது. பிளாஸ்டிக் பொருள்களால் அவர் தாக்கியதால் ஒரு கட்டத்தில் தோற்றுப்போன ஒக்டோபஸ் தனது நிறத்தை மாற்றிக் கொண்டு பாறைகளுக்குள் ஓடி ஒளிந்து கொண்டது.



இந்தப் பெரிய ஒக்டோபஸ்கள் பசிபிக் லாஸ்கா மற்றும் ஜப்பானைச் சுற்றியுள்ள கடல் நீரில் வாழ்கின்றன. இதுவரை கண்டுபிடிக்கப்பட்ட மிகப்பெரிய ஒக்டோபஸ் ஒன்று மூன்று குட்டி யானைகளைப் போன்று 600 பவுண்டுகள் எடையுள்ளதாக இருந்தது.

(உ)

## பாகிஸ்தானுக்கு ரூ.6 லட்சம் கோடி கடன் வழங்குகின்றது ஆசிய அபிவிருத்தி வங்கி!

### பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள உதவி




இஸ்லாமாபாத்,ஜுன்18

பொருளாதார நெருக்கடியில் தவிக் கும் பாகிஸ்தானுக்கு 3ஆயிரத்து 400 கோடி டொலர் (இலங்கைப்பணத்தில் சுமார் ஆறு லட்சம் கோடி ரூபா) கடன் வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்துள்ளது.

பாகிஸ்தான் கடுமையான பொருளாதாரநெருக்கடியில் சிக்கித் தவிக்கிறது. மந்தமான வளர்ச்சி, உயர் பணவீக்கம் மற்றும் அதிகப்படியான கடன் போன்ற காரணங்களால் பாகிஸ்தானின் பொருளாதாரம் வீழ்ச்சியைச் சந்தித்து வருகிறது.

அந்நாட்டின் அன்னிய செலாவணி கையிருப்பு முன்எப்போதும் இல்லாத அளவுக்கு வேகமாகக் குறைந்து வருகிறது. இதனால் நாட்டின் பொருளாதார நிலைமையை கையாளுவது பிரதமர் இம்ரான் கான் அரசுக்கு பெரும் சவாலாக உள்ளது.

இந்த நிலையில், நிதி நெருக்கடியால் தவிக்கும் பாகிஸ்தானுக்கு 3.4 பில்லியன் அமெரிக்க டொலர்களை (இலங்கை மதிப்பில் சுமார் ரூ. 6லட்சம் கோடி) கடனாக வழங்க ஆசிய வளர்ச்சி வங்கி முன் வந்துள்ளது.

இது தொடர்பாக பாகிஸ்தானின் நிதி அமைச்சகத்துக்கும், ஆசிய வளர்ச்சி வங்கிக்கும் இடையே ஒப்பந்தம் கையெழுத்தாகி இருக்கிறது.

பிரதமர் இம்ரான்கானின் நிதி ஆலோசகரான அப்துல் ஹபீஸ் சேக் இது பற்றி கூறுகையில்-

பாகிஸ்தானின் நிதிப் பிரச்சினையை சமாளிக்க ஆசிய வளர்ச்சி வங்கி 3.4 பில்லியன் அமெரிக்க டொலர்களைக் கடனாக வழங்குகிறது.

இதில் இரண் டாயிரத்து 200 கோடிஅமெரிக்கடொலர்கள்நடப்பு நிதி ஆண்டில் கிடைக்கும் எனக் கூறினார்.

இது தொடர்பாக பாகிஸ்தான் நிதிஅமைச்சகம்வெளியிட்டுஉள்ள அறிக்கையில், நிதி ஆலோசகர் அப்துல்ஹபீஸ் ஷேக்கை தொடர்பு கொண்டு பேசிய ஆசிய வளர்ச்சி வங்கியின் இயக்குநர் வெர்னர் லெய்பாச், பாகிஸ்தானை பொருளாதார நெருக்கடியில் இருந்து மீட்டெடுக்கதேவையானஅனைத்து உதவிகளையும் ஆசிய வளர்ச்சி வங்கி செய்யத்தயாராக இருக்கிறது எனக் கூறினார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, வெளிநாட்டு கடன் சுமைகளை குறைப்பதற்காக பாகிஸ்தானுக்கு அடுத்த 3 ஆண்டுகளில் 600 கோடி டொலர்களை (இலங்கைமதிப்பில்சுமார்ரூ. ஆறு லட்சம் கோடி) வழங்க சர்வதேச நிதியம் கடந்த மாதம் ஒப்புதல் வழங்கியது குறிப்பிடத்தக்கது.

(உ)

காலைக்கதிர் Kalaikathir



# தெரிவுக் குழுவால் மைத்திரி கலங்கிப் போயுள்ளாரா?

## அடுத்து வரும் தேர்தலில்

# தமிழ், முஸ்லிம் அரசியல்வாதிகளின் நகர்வுதான் என்ன?

வடக்கு, கிழக்கில் அமைக்கப்பட்டிருக்கும் சோதனைச் சாவடிகள் குறித்தும் வடக்கு, கிழக்கில் ஒருவித ராணுவ மயமாதல் நிகழ்வது குறித்தும் அமைச்சர் மனோ கணேசன் கடந்த வாரம் யாழ் மாவட்டப் படைகளின் கட்டளைத் தளபதியுடன் பேசியிருக்கிறார். தமிழ் மக்களை பாதுகாப்பதற்காகவே இவ்வாறான சோதனைச் சாவடிகளை அமைத்திருப்பதாகக் கூறிய கட்டளைத் தளபதி இது தொடர்பில் தான் நடவடிக்கை எடுப்பதாக மனோ கணேசனுக்கு உறுதியளித்திருக்கிறார். மனோ கணேசன் தனது முகநூலில் இதுபற்றி எழுதியிருந்தார்.

அவர் இவ்வாறு எழுதிய அடுத்த நாள் வடக்கில் சோதனைக் கெடுபிடிகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு குறைந்தன. குறிப்பாக ஆனையிறவில் பயணிகளை ஏற்றி இறக்கும் சோதனை நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. பின்னர் வாகனங்களைப் பதியும் நடைமுறையும் பெருமளவிற்கு நிறுத்தப்பட்டது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் பின் அவசரகால சட்டத்தின் கீழ் வடக்கு, கிழக்கில் ஒருவித ராணுவ மயமாதல் நிகழ்வது குறித்து கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டியிருக்கிறார்கள்.

எனினும் அரசாங்கம் அது தொடர்பில் உரிய நடவடிக்கைகள் எதையும் எடுக்கவில்லை. கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகளை விடவும் அமைச்சர் மனோ கணேசன் யாழ் மாவட்ட கட்டளைத் தளபதியோடு நேரடியாக பேசியது ஒப்பீட்டளவில் அதிக பயனைக் கொடுத்திருக்கிறது. இது நாடாளுமன்றத்துக்கு உள்ள மதிப்பு எத்தகையது என்பதனை காட்டுகிறதா?

ஆனால் மனோ கணேசன் கேட்டுக் கொண்டதற்கிணங்க ஊடகக் கவனிப்பு மிக்க ஏ-9 பிரதான சாலையில்தான் சோதனைகள் குறிப்பிடத்தக்க அளவிற்கு குறைக்கப்பட்டுள்ளன. மாறாக பரந்தனிலிருந்து வடடக்கச்சியை நோக்கிச் செல்லும் உள் வீதியான பன்னங்கண்டி வீதியில் சோதனை நடவடிக்கைகள் முன்னரைப் போலவே இப்போதும் தொடர்கின்றன.

பயணிகள் தமது வாகனங்களை விட்டு இறங்கி ஆவணங்களை காட்டிப் பதிய வேண்டும். அப்படியென்றால் ஜிகாத் அச்சம் வடடகச்சிக்குள்தான் அதிகம் உண்டு என்று படைத்தரப்பு கருதுகின்றதா? இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அரசியல்வாதிகளும் மக்கள் பிரதிநிதிகளும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? அவர்களில் பெரும்பாலானவர்கள் கம்பெரலியத் திட்டத்தின்கீழ் எந்த வீதியைத் திருத்தலாம் என்று தேடித் திரிகிறார்களா?

ஒருபுறம் கூட்டமைப்பு கம்பெரலியத் திட்டத்தின்கீழ் அரசாங்கத்தின் அபிவிருத்திப் பங்காளியாக காணப்படுகிறது. இன்னொருபுறம் அவசரகாலச் சட்டத்தை எதிர்த்துப் பேசி வருகிறது. கம்பெரலியத் திட்டத்தின்கீழ் முன்னெடுக்கப்படும் அபிவிருத்தி வேலைகளுக்கான பெயர்ப் பலகைகளில் ஒரு வாசகம் காணப்படுகிறது. அது 'அபிவிருத்தி யுத்தம்' என்று இருக்கிறது.

ஒரே நேரத்தில் கூட்டமைப்பு அபிவிருத்திக்கான யுத்தத்தையும் ராணுவ மயமாதலுக்கு எதிரான யுத்தத்தையும் முன்னெடுக்கின்றதா? நடைமுறையில் அவ்வாறு ஒன்றுக்கொன்று எதிரான இரண்டு யுத்தங்களை முன்னெடுக்க இயலுமா?

உண்மையில் அவர்கள் அவசரகாலச் சட்டத்தின் கீழ் சாதாரண மக்கள் அனுபவிக்கும் துன்பங்களுக்கு எதிராகப் போராடுவதை விடவும் கம்பெரலிய திட்டத்தின்கீழ் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலேயே அதிகம் கவனம் செலுத்துவதாக தெரிகிறது.

ஏனெனில் இந்த ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாக அமையக் கூடும் இந்த ஆண்டில் சிலவேளைகளில் அரசு தலைவருக்கான தேர்தல் மட்டும்தான் நடக்குமானால் நிச்சயமாக அடுத்த ஆண்டு ஒரு தேர்தல் ஆண்டாகவே அமையும்.

அவ்வாண்டில் ஒரு நாடாளுமன்ற தேர்தலையும் மாகாண சபைகளுக்கான தேர்தலையும் நடத்த வேண்டி இருக்கும். அப்படி ஓர் எதிர்பார்ப்போடுதான் ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கம் வடக்கு கிழக்கில் மட்டுமல்ல தெற்கிலும் அபிவிருத்திப் பணிகளை வேகமாக முன்னெடுத்து வருகிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின் ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் இமேஜ் குறிப்பிடத்தக்க அளவுக்கு சரிந்தது. ஆனால் ஒப்பீட்டளவில் ரணிலை விடவும் மைத்திரி பால சிறிசேனவின் அரசியல் இமேஜை




தாக்குதல் விளைவுகள் மேலும் நொறுக்கியிருக்கின்றன.

கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் சிறிசேன முன்னெடுத்த யாப்புச்சதி முயற்சியானது அவருடைய அரசியல் இமேஜை தலைகீழாகிவிட்டது. இப்பொழுது உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் விளைவுகளின் விளைவுகள் அவரை மேலும் அபகீர்த்திக்கு உள்ளாக்கியிருக்கின்றன. தாக்குதல்களுக்கு

> தமிழ் மக்களின் வாக்குகள் வழமை போல் இம்முறையும் ராஜபக்ஷவுக்கு எதிராகத்தான் விழும். பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாக வாக்களிப்பு வீதம் குறைந்தால் தவிர தேர்தல்கள் சுமுகமான ஒரு சூழலில் நடக்குமாக இருந்தால் தமிழ் வாக்குகள் அதிகபட்சம் ராஜபக்ஷவுக்கு எதிராகவே விழும். அதை மாற்றத் தம்மால் முடியாது என்பது ராஜபக்ஷக்களுக்கு நன்கு தெரிந்திருக்கிறது. ஆனால் முஸ்லிம் வாக்குகள் தளம்பக் கூடும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். கடந்த அரசுத் தலைவருக்கான தேர்தலின் போது முஸ்லிம் வாக்குகள் ரணிலுக்கே விழுந்தன.

காரணம் ரணிலை விடவும் கூடுதலாக சிறிசேனதான் என்ற ஓர் அபிப்பிராயம் சிங்கள நடுத்தர வர்க்கத்தின் மத்தியில் பரவி வருகிறது.

குறிப்பாக தாக்குதல்கள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் சிறப்புத் தெரிவுக்குழுவின் விசாரணைகள் சிறிசேனவை அதிக பட்சம் குற்றவாளியாகக் காட்டும் ஒரு நிலைமை உருவாகியுள்ளது. இத் தெரிவுக் குழுவின் மூலம் ரணில் நன்கு திட்டமிட்டு சிறி சேனவுக்கு ஒரு பொறி வைத்தார். அது ஒரு பொறி என்று கண்டதும் சிறிசேன தெரிவுக்குழுவில் புலனாய்வு அதிகாரிகள் கலந்து கொள்ளக் கூடாது என்று உத்தரவிட்டார்.

இதன்மூலம் மறுபடியும் நாடாளுமன்றத்துக்கும் நிறைவேற்று அதிகாரத்திற்கும் இடையிலான ஒரு மோதல் நிலையை அவர் உருவாக்கினார்.

கடந்த ஒக்டோபர் ஆட்சிக் குழப்பத்தில் ஏற்பட்டதைப் போல நிறைவேற்று அதிகாரமா அல்லது சட்டவாக்க அதிகாரமா என்ற மோதல் மறுபடியும் தீவிரமடைந்திருக்கிறது.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்குஎது முதன்மைகாரணமோ அதுவே – அதாவது அரசியல் அதிகாரம் இரண்டாகப் பிளவுபட்டிருப்பது– தாக்குதல்களின் விளைவுகளின் மூலமாகவும் மறுபடியும் புதிய வடிவத்தை அடைந்திருக்கிறது. பத்தொன்பதாவது திருத்தச் சட்டம் மறுபடியும் விவாதப் பொருளாகி இருக்கிறது.

உண்மையில் கடந்த ஆண்டு ஒக்டோபர் ஆட்சி குழப்பத்தோடு ரணில் – மைத்திரி அரசாங்கத்திற்கு மக்கள் வழங்கிய ஆணை காலாவதியாகிவிட்டது. தமிழ் மக்களின் வாக்குகளால் அதிகாரத்தைப் பெற்ற மைத்திரி தமிழ் மாணவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் முடக்க முயற்சிக்கிறார். ஜிகாத் தாக்குதல்களின் பின் வடக்கு கிழக்கில் ஒருவித யுத்தச் சூழலை உருவாக்கி தமிழ் அரசியற் செயற்பாட்டாளர்களை அச்சுறுத்த முயற்சிக்கிறார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தமிழ்ப் பெயர் கொண்ட குளத்திற்கு சிங்களப் பெயரைச் சூட்டி அதில் மீன் குஞ்சுகளை விடுகிறார். அது மகாவலி எல் வலயத் திட்டத்தின் ஒரு பகுதி என்று சந்தேகிக்கப்படுகிறது. இப்படிப் பார்த்தால் 2015 இல் தமிழ் மக்களும் முஸ்லிம் மக்களும் ஒரு பகுதி சிங்கள மக்களும் தனக்கு வழங்கிய ஆணைக்கு மாறாக மைத்திரிபால சிறிசேன செயற்பட்டு வருகிறார்.

ஒக்டோபர் ஆட்சி குழப்பத்தோடு இப்போது இருக்கும் அரசாங்கத்துக்கு மக்கள் வழங்கிய ஆணை தீர்ந்து போய் விட்டது. இந்த அடிப்படையில் சிந்தித்தால் ஒரு புதிய தேர்தலை நடத்தி ஒரு புதிய மக்கள் ஆணையைப் பெற வேண்டி இருக்கிறது. ஆனால் அப்படி ஒரு தேர்தலை உடனடிக்கு நடத்த ரணிலும் தயாரில்லை. அவரை ஆதரிக்கும் மேற்கு நாடுகளும் அதை விரும்பவில்லை.

தேர்தல்களுக்கான காலத்தை பொருத்தமான வேளை வரும்வரை ஒத்திவைப்பதன் மூலம் இடைப்பட்ட காலகட்டத்தில் மைத்திரிபால சிறிசேனவையும் அவரைப் பின்னிருந்து இயக்கும் மஹிந்தவை யும் மக்கள் முன் அம்பலப்படுத்தலாம் என்று அவர்கள் சிந்திக்கிறார்கள்.

உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் இப்படி சிந்திப்பவர்களின் திட்டங்களைக் குழப்பி விட்டன. எனினும் அத்தாக்குதல்களின் விளைவுகளின் விளைவுகள் சிறிசேனவுக்கு பாதகமான திருப்பத்தை அடைந்து வருகின்றன. அவை ரணிலை விடவும் சிறிசேனவை அதிகம் அம்பலப்படுத்தி வருகின்றன. இது எதிர்காலத்தில் சிறிசேன தேர்தலில் நிற்கக் கூடிய வாய்ப்புக்களை மேலும் குறைக்கக்கூடியது.

பொறுமையாகக் காத்திருந்தால் அடுத்த தேர்தலில் சாதகமான நிலைமைகள் மேலும் மேலும் கனியக் கூடும் என்று ரணில் விக்கிரமசிங்க நம்பும் அளவிற்கு சிறிசேன மேலும் மேலும் அம்பலப்படுத்தப்படுகிறார்.

அடுத்த அரசுத் தலைவருக்கான தேர்தல் நடந்தால் அதில் யாராவது ஒரு ராஜபக்ஷதான் வெல்லக்கூடும் என்ற நிலைமைகள் உயிர்த்த ஞாயிறு தாக்கு தலின் பின் வளர்ச்சி அடைந்தன. அத்தாக்குதல்களால் அதிக லாபம் அடைந்தது ராஜபக்ஷ அணிதான். அத்தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளும் முஸ்லிம் வாக்குகளும் தீர்மானகரமானவை.

தமிழ் மக்களின் வாக்குகள் வழமை போல் இம்முறையும் ராஜபக்ஷவுக்கு எதிராகத்தான் விழும். பாதுகாப்புக் கெடுபிடிகள் காரணமாக வாக்களிப்பு வீதம் குறைந்தால் தவிர தேர்தல்கள் சுமுகமான ஒரு சூழலில் நடக்குமாக இருந்தால் தமிழ் வாக்குகள் அதிகபட்சம் ராஜபக்ஷவுக்கு எதிராகவே விழும். அதை மாற்றத் தம்மால் முடியாது என்பது ராஜ பக்ஷக்களுக்கு நன்கு தெரிந்திருக்கிறது.

ஆனால் முஸ்லிம் வாக்குகள் தளம்பக் கூடும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். கடந்த அரசுத் தலைவருக்கான தேர்தலின் போது முஸ்லிம் வாக்குகள் ரணிலுக்கே விழுந்தன.

தற்போது, ரிசாத் பதியுதீன் மற்றும் ஹிஸ்புல்லா ஆகியோருக்கு எதிரான இனவாதிகளின் நடவடிக்கைகளை எதிர்கொள்ள முஸ்லிம் தலைவர்கள் ஒற்றுமையாக ஒன்றுதிரண்டமை மூலம் இரண்டு பெரிய சிங்களக் கட்சிகளுக்கும் கூர்மையான செய்திகளை அனுப்பியிருக்கிறது.

2015 இல் அரசுத் தலைவருக்கான தேர்தலின்போது தனது விசுவாசத்தை முதலில் இடம் மாற்றிக் கொண்டவர் ரிஷாத் பதியுதீன். எனவே இம்முறையும் அரசுத் தலைவருக்கான தேர்தலில் முஸ்லிம் தலைவர்கள் ஓர் இறுக்கமான திரளாகி யாரை ஆதரிக்கிறார்களோ அவர்களுக்கு வெற்றி வாய்ப்புகள் அதிகம்.



ஒரு பலவீனமான தலைமையை ஆதரித்து தொடர்ந்தும் அடி வாங்குவதை விடவும் ஒரு பலமான தலைமையை ஆதரித்து அத்தலைமைக்குத் தமது விசுவாசத்தை காட்டுவதன் மூலம் தம்மைத் தற்காத்துக் கொள்ளலாம்.

ஒரு தற்காப்பு நோக்கு நிலையிலிருந்து முஸ்லிம் தலைவர்கள் சிந்திப்பார்களாக இருந்தால் அதாவது வெல்லமுடியாத ஓர் இனவாதத் தோடு மோதுவதை விடவும் அதனிடம் சரணடைவது என்று முடிவெடுத்தால் அது ராஜபக்ஷாக்களுக்கு சாதகமானது.

மாறாக கடும்போக்கு இனவாதிகளுக்கு எதிராக தாராளத் தன்மை மிக்க இனவாதிகளை ஆதரிப்பது என்ற ஒரு முடிவுக்கு முஸ்லிம் தலைமைகள் போகுமாக இருந்தால் அது ராஜபக்ஷாக்களுக்கு பாதகமானது. அப்படியொரு நிலைமையை எதிர்பார்த்தால் ராஜபக் ஷாக்கள் பெருமளவுக்குச் சிங்கள வாக்குகளால் மட்டும் வெல்லும் ஒரு தேர்தல் வியூகத்தைப் பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கும். ★

**நன்றி – ஆதவன்**

# நெருக்கடியில் சிக்கியுள்ள தெரிவுக் குழு விசாரணை!

## திரிசங்கு நிலையில் புலனாய்வு அதிகாரிகள்

*கொழும்பு, ஜூன் 18*

***அரச பாதுகாப்பு அதிகாரிகள், ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் குறித்து விசாரிக்கும் நாடாளு மன்றத் தெரிவுக்குழு முன்பாகச் சாட்சியமளிக்கக்கூடாது என ஜனாதிபதி விடுத்துள்ள உத்தரவை அடுத்து தெரிவுக்குழு விசாரணை நெருக்கடியில் சிக்கியுள்ளது.***

இதுகுறித்து தெரிவுக்கு உறுப்பினர்கள் இன்று சபாநாயகர் கருஜய சூரியவைச் சந்தித்து, அவரது நிலைப்பாட்டை அறிந்து கொள்ள வுள்ளதுடன், தெரிவுக்குழுவின் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வழிமுறைகள்குறித்தும்ஆராயவுள்ளனர்.

ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் தொடர்பாக, பதவியில் இருந்த முன்னாள் பாதுகாப்புச் செயலர் ஹேமசிறி பெர்னாண்டோ, பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர, தேசிய புலனாய்வுப் பிரிவு தலைவர் சிசிர மெண்டிஸ் உள்ளிட்டவர்களிடம், நாடாளுமன்றத் தெரிவுக்குழு சாட்சியங்களைப் பெற்றுள்ளது.

இதன் அடிப்படையில் அரச புலனாய்வுச் சேவையின் தலைவரான நிலந்த ஜயவீரவையும் சாட்சியமளிக்க தெரிவுக்குழு அழைக்க எதிர்பார்த்துள்ளது. ஆனால், ஜனாதிபதியின் உத்தரவை மீறி அவர் சாட்சியமளிக்க முன்வருவாரா என்ற குழப்பம் ஏற்பட்டுள்ளது.

நாடாளுமன்றச் சிறப்புரிமைகள் சட்டத்தின் கீழ், எந்தவொரு அரச அதிகாரிக்கும் அழைப்பு விடுக்கும் அதிகாரம் தெரிவுக்குழுவுக்கு உள்ளது. தெரிவுக்குழு முன்பாகச் சாட்சியமளிக்க மறுக்கும் எந்த அதிகாரிக்கு எதிராகவும் உயர்நீதிமன்றத்தில் முறையிட முடியும் என்றும், சட்ட நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் தெரிவுக்குழு உறுப்பினர்கள் தெரிவித்தனர்.

எனினும் இந்த விடயம் குறித்து, சபாநாயகரைச் சந்தித்த பின்னரே, முடிவெடுக்கப்படும் என்றும் அவர்கள் கூறினர்.

அதேவேளை, நாடாளுமன்றத் தெரிவுக்குழு முன்பாக, சாட்சியமளிப்பதா இல்லையா என்பதைத் தீர்மானிக்க முடியாத குழப்ப நிலையில் அதிகாரிகள் உள்ளனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ஐ)

## மின்சார சபை வாடிக்கையாளர்கள் சேவைக்கு மொபைல் அப் அறிமுகம்

இலங்கைமின்சாரசபையின் வாடிக்கையாளர் சேவையை மேலும் செயற்றிறன் மிக்கதாக மாற்றுவதற்கு புதிய அதிதிறன் அலைபேசி செயலி (Smart Phone App) அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்தச் செயலி நேற்று முதல் அன்ட் ரொய்ட் மற்றும் ஐ.ஓ.எஸ். இயங்கு தளங்களில் தரவிறக்கம் செய்ய முடியும் என்று மின் சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

CEB Care எனும் பெயரில் இந்த செயலி அறிமுகப் படுத்தப்படவுள்ளது.

வாடிக்கையாளர்கள் தமது அதிதிறன் அலைபேசியில் CEB Care என்ற செயலியை, பதிவிறக்கம் செய்து பயன்படுத்த முடியும்.

மின்வெட்டு, முறைப்பாடுகளை முன் வைத்தல், மின்கட்டணம்தொடர்பிலான சேவைகளை இந்த செயலி ஊடாக வாடிக்கையாளர்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும் என்று மின்சக்தி மற்றும் மீள்புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## சஹ்ரானின் சகா தடுத்துவைப்பு

கொழும்பு, ஜூன் 18

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்பின் தலைவரான தற்கொலை குண்டுதாரி சஹ்ரான் ஹாசீமுடன் தொடர்பைப் பேணிவந்தார் என்ற சந்தேகத்தில், வெலிமடையில் வைத்து நேற்றுமுன்தினம் கைதுசெய்யப்பட்ட நபரை, 72 மணித்தியாலங்கள் தடுத்து வைத்து விசாரிப்பதற்கு நீதி மன்றம் அனுமதியளித்துள்ளதாக வெலிமடை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டபிள்யூ.எஸ்.ஹேரத் தெரிவித்தார்.

வெலிமடை – பொரகஸ் சீல்மியாபுர புதுர்திஸா மாவத்தையைச் சேர்ந்த, 21 வயது நபரே, இவ்வாறு தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகிறார். (ஐ)

## அமைச்சரவை நிச்சயம் கூடும்!

### அடித்துச் சொல்கிறார் ரவி

கொழும்பு, ஜூன் 18



அமைச்சரவைக் கூட்டங்களை முன்னெடுப்பதில் எந்தச் சிக்கலும் கிடையாது. இந்த வார அமைச்சரவைக் கூட்டம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நிச்சயமாக இன்று கூடும் என அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

பிணைமுறி விவகாரத்தில் என் மீது முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு எதிராக என் மீதுள்ள நியாயத்தை நான் வெளிப்படுத்தியுள்ளேன். இது எனது கட்சியில் உள்ள சிலருக்கு பதிலடியாக அமையும் எனவும் மின்சார சபையை வீழ்ச்சியடையச் செய்து தனியார் இலாபத்தைப் பெற்றுக் கொள்ள சிலர் முயற்சிக்கின்றனர்.

ஆனால் ஒரு காலமும் அவர்களின் எதிர்பார்ப்புக்கு நாங்கள் இடமளிக்க போவதில்லை என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஐ)

## சுமந்திரன், விஜயகலா தலைமையில் ஒருங்கிணைப்புக் குழுவின் கூட்டம்!





யாழ்ப்பாணம், ஜூன் 18

வடமராட்சி கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை மருதங்கேணி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்றது.

இணைத்தலைவர்களான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன், இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் ஆகியோர் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இதில் மருதங்கேணி பிரதேச செயலர் க.கனகேஸ்வரன், பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ.சா. அரியகுமார், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான ச.சுகிர்தன், கே.சயந்தன், யாழ்.மாவட்ட திணைக்களங்களின் தலைவர்கள், பருத்தித்துறை பிரதேச சபையின் உப தவிசாளர் கு.தினேஷ், பருத்தித்துறை பிரதேச சபையின் வடமராட்சி கிழக்கு வட்டாரங்களைச் சேர்ந்த உறுப்பினர்கள், மருதங்கேணி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பொது அமைப்புக்களின் முக்கியஸ்தர்கள் எனப் பலரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்றனர்.

வடமராட்சி கிழக்கின் அபிவிருத்திகள் தொடர்பில் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டன. ஏற்கனவே அபிவிருத்திகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதிகள் இதன்போது அங்கீகரிக்கப்பட்டன. (ஐ)

## யாழ்.பல்கலை வெற்றிடங்களுக்கு அதிகளவு முஸ்லிம்கள் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ். பல்கலைக்கழகத்தில் காணப்படும் பணிவெற்றிடங்களை நிரப்புவதற்குத் தெரிவு செய்யப்பட்டவர்களில், 137 பேர் முஸ்லிம்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நாடாளுமற்ற உறுப்பினர்களால் சிபார்சு செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் நேரடியாகச் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் இருந்து முதல் கட்டமாக 454 பேர் நேர்முகத் தேர்வுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களில் 137 பேர் முஸ்லிம் நபர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

## சஹ்ரான் விடயத்தில் ஜனாதிபதியை சாதுரியமாக ஏமாற்றிய ஹிஸ்புல்லா

### ஸ்ரீநேசன் எம்.பி. குற்றச்சாட்டு

மட்டக்களப்பு, ஜூன் 18



பயங்கரவாதி சஹ்ரான் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு ஆதரவாக செயற்பட்டார் எனக் கூறி கிழக்கின் முன்னாள் ஆளுநர் ஹிஸ்புல்லா ஜனாதிபதியை சாதுரியமாக ஏமாற்றியுள்ளாரென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீநேசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

மேலும், இவரது கொள்கையற்ற அரசியல் பின்புலத்தை தலைவர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

பயங்கரவாதி சஹ்ரான் தற்போதைய ஜனாதிபதியின் ஆதரவாளராகத்தான் செயற்பட்டவர் என்றும், கடந்த ஜனாதிபதித் தேர்தலில் எப்போதும் தான் மஹிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளராகத் தான் செற்பட்டார் என்றும் ஹிஸ்புல்லா நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தெரிவித்துள்ளார்.

அவ்வாறு பார்க்கப்போனால் தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை ஹிஸ்புல்லா எவ்வளவு சாதுரியமாக ஏமாற்றியுள்ளார் என்பதை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

அவர் அரசியலில் கட்சித் தாவலிலேயே ஈடுபட்டு வருகின்றார். குறுகிய காலகட்டத்தில் அனைத்து அரசியல் தலைவர்களையும் ஏமாற்றும் செயற்பாட்டையே அவர் செய்து வருகிறார் – என்றார். (ஐ)

## கொக்குவில் ரயில் நிலைய அதிபர் மீது தாக்குதல் நடத்தியோரில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், ஜூன் 18

கொக்குவில் ரயில் நிலைய அதிபர் (ஸ்ரேசன் மாஸ்டர்) மீது தாக்குதல் நடத்திய கும்பலைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்குவில் ரயில் நிலைய அதிபர், 8 பேர் கொண்ட கும்பல் ஒன்றால் தாக் கப்பட்டு தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இந்தச் சம்பவம் கடந்த 12ஆம் திகதி புதன்கிழமை மாலை இடம்பெற்றது.

கொக்குவில் சந்திக்கு அண்மையாக உள்ள ஓட்டோ திருத்தகத்தில் கொக்குவில் ரயில் நிலைய அதிபர் நின்றுள்ளார். அங்கு மோட்டார் சைக்கிள்களில் வந்த 8 பேர் கொண்ட கும்பல், அவரைத் தாக்கியது.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், சந்தேகநபர்கள் தலைமறைவாகியுள்ளனர் என்று தெரிவித்தனர்.

இந்த நிலையில் யாழ்ப்பாணப் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழான பொலிஸ் பிரிவு, சந்தேகநபர்களில் ஒருவரை நேற்றுமுன்தினம் இரவு கைது செய்தது.

சுன்னாகம் பொலிஸ் பிரிவிலுள்ள அவரது வீட்டில் வைத்துச் சந்தேகநபர் கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். விசாரணைகளின் பின்னர் அவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)




# மீண்டும் பாகிஸ்தானை வீழ்த்தி வெற்றி பெற்றது இந்திய அணி

உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில், எங்களை தோற்கடிக்கவே முடியாது என இந்தியக் கிரிக்கெட் அணி, மீண்டுமொரு முறை பாகிஸ்தான் அணிக்கு உணர்த்தியுள்ளது.

இங்கிலாந்தில் தற்போது நடைபெற்றுவரும் உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் 22ஆவது போட்டியில், பரம எதிரி நாடுகளான இந்தியா அணியும், பாகிஸ்தான் அணியும் பலப்பரீட்சை நடத்தின.

நேற்று முன் தினம் மன்செஸ்டர் ஓல்ட் ட்ரப்போர்ட் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

நீலம் மற்றும் பச்சை வண்ண ஆடைகளால் மைதானத்தில் புடை சூழ்ந்திருந்த இரசிகர்கள் சத்தமிட்டு வீரர்களை உற்சாகப்படுத்த, பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் இப்போட்டி ஆரம்பமானது.

இந்தியா அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான ரோஹித் சர்மா மற்றும் கே.எல். ராகுல் ஆகியோர், பாகிஸ்தான் அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான மொஹமட் ஆமிரின் பந்தை எதிர்கொண்டனர்.

வழமைக்கு மாறாக கொஞ்சம் வேகமாகவே ஆமிர் பந்தை வீசினார். ஆரம்ப பந்துகளை நிதானமாக எதிர்கொண்ட இருவரும், பந்துகளின் நுணுக்கங்களை விரைவில் கற்றுக் கொண்டு ஓட்டங்களை குவிக்கத் தொடங்கினர். பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சாளர்களைத் திறம்பட எதிர்கொண்ட இருவரும், பாகிஸ் தான் அணியில் யார் பந்து வீசினாலும் அடிக்கும் திறனை வளர்த்துக் கொண்டனர். இதன்போது 7 வீரர்கள் தங்களது பந்து வீச்சு திறனை இந்திய வீரர்களிடம் சோதித்தனர்.

ஆரம்பமே அமர்களப்படுத்திய இவர்கள், 136 ஓட்டங்களை ஆரம்ப விக்கெட்டுக்காக பகிர்ந்து கொண்டனர்.

இதுவே இரு அணிகளுக்கிடையிலான சிறந்த ஆரம்ப இணைப்பாட்டமாகும். இதற்கு முன்னதாக 1996ஆம் ஆண்டு சச்சின் டெண்டுல்கரும் சித்துவும் இணைந்து 90 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்றிருந்ததே சாதனையாக இருந்தது. தற்போது அந்த இணைப்பாட்டச் சாதனை தகர்க்கப்பட்டுள்ளது.

23.5ஆவது ஓவரில் ராகுல் 57 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, வஹாப் ரியாஸின் பந்தில் பாபர் அசாமிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்து வெளியேறினார். எனினும் காயமடைந்த ஷிகர் தவானின் பதிலீடுக்காக ஆரம்ப துடுப்பாட்ட வீரராக களமிறக்கப்பட்ட ராகுல், எவ்வித குறைபாடுமின்றி தனது பங்கைச் செவ்வனே செய்த திருப்தியுடன் ஓய்வறை திரும்பினார்.

இதனையடுத்து களமிறங்கிய விராட் கோஹ்லி, ரோஹித் சர்மாவுக்கு சிறப்பான ஒத்துழைப்பை வழங்க ரோஹித் சர்மா, தனது 24ஆவது சதத்தைப் பூர்த்தி செய்தார். இருவரும் இணைந்து 98 ஓட்டங்கள் இணைப்பாட்டமாக பகிர்ந்திருந்த வேளை, ரோஹித் சர்மா 140 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

ரோஹித் சர்மா 32 ஓட்டங்கள் பெற்றிருந்த போது பாகிஸ்தான் அணிக்கு ரன் அவுட் வாய்ப்பொன்று கிடைத்தது. எனினும் அதனை அவர்கள் தவறவிட்டனர்.

ரோஹித் சர்மாவின் இந்த ஓட்ட எண்ணிக்கையானது இரு அணிகளுக்கிடையில் துடுப்பாட்ட வீரொருவர் பெற்றுக்கொண்ட அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாக பதிவு செய்யப்பட்டது. இதற்கு முன்னர் விராட் கோஹ்லி 107 ஓட்டங்கள் பெற்றதே அதிகபட்ச ஓட்ட எண்ணிக்கையாக இருந்தது.

அத்தோடு கடந்த உலகக்கிண்ண தொடரின் பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியில், கோஹ்லி சதம் அடித்திருந்தார். இம்முறை ரோஹித் சர்மா அடித்தார்.

இதன்பிறகு தரவரிசையில் மாற்றம் நிகழ்த்தப்பட்டு விஜய் சங்கருக்கு பதிலாக அதிரடியாக துடுப்பெடுத்தாடுவதற்கு ஹர் திக் பாண்ட்யா களமிறக்கப்பட்டார்.

இவர் 19 பந்துகளில் 1 சிக்ஸர், 2 பவுண்ரிகள் அடங்களாக 26 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்து ஆட்டமிழந்து வெளியேற, அடுத்து களமிறங்கிய டோனி ஒரு ஓட்டத்துடன் ஏமாற்றினார்.

இதனையடுத்து, கோஹ்லியுடன் ஜோடி சேர்ந்த விஜய் சங்கர் நிதானத்துடன் பந்துகளை எதிர்கொண்டு ஓட்டங்களை சேர்த்தார்.

இந்த நிலையில், அணித்தலைவர் விராட் கோஹ்லி 77 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை, மொஹமட் ஆமிரின் பவுண்ஸ் பந்துக்கு துடுப்பாட்ட மட்டையை சுழற்றி அடிக்க முயன்ற போது, விக்கெட் காப்பாளர் சப்ராஸ் அஹமட்டிடம் பிடிகொடுத்து வெளி யேறினார்.

ஆனால் இந்த ஆட்டமிழப்பினை தொலைக்காட்சி வாயிலாக பார்க்கும் போது, பந்து துடுப்பாட்ட மட்டையில் படாமலேயே சென்றது. ஆனால் பந்து துடுப்பாட்ட மட்டையை நெருங்கும்போது டிக் என சத்தம் கேட்டது. எனினும் கோஹ்லி மைதானத்தை விட்டு வெளியேறியதால் ஆட்டமிழப்பு கொடுக்கப்பட்டது.

துடுப்பாட்ட மட்டைப் பிடியில் ஏற்பட்ட சத்தமே அது எனப் பின்னர் கிரிக்கெட் வர்ணனையாளர்களால் அறிவிக்கப்பட்டது.

இவ்வாறு துரதிஷ்டவசமாக விராட் கோஹ்லி ஆட்டமிழந்து வெளியேறினாலும் அவர், மிகப் பெரிய சாதனையைப் பதிவு செய்த மகிழ்ச்சியுடனேயே ஓய்வறை திரும்பினார்.

விராட் கோஹ்லி இப்போட்டியின் போது, ஒருநாள் கிரிக்கெட்டில் 11000 ஓட்டங்களைக் கடந்தார். அத்தோடு குறைந்த இன்னிங்சு களில் 11000 ஓட்டங்களை கடந்த வீரர் என்ற சாதனையையும் படைத்தார்.

அவர் 222 இன்னிங்சுகளில் இந்த ஓட்ட எண்ணிக்கையை கடந்தார். இதற்கு முன்னதாக இந்திய அணியின் முன்னாள் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர் 276 இன்னிங்சுகளில் 11000 ஓட்டங்களை கடந்ததே சாதனையாக இருந்தது. அதனை தற்போது கோஹ்லி முறியடித்துள்ளார்.

அத்தோடு, கோஹ்லிக்கு 10000 ஓட்டங்களிலிருந்து 11000 ஓட்டங்களை எட்டுவதற்கு 17 இன்னிங்ஸ்களே தேவைப்பட்டன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதனையடுத்து விஜய் சங்கரும் கேதர் ஜாதவ்வும் ஜோடி சேர்ந்து 22 ஓட்டங்களை இணைப்பாட்ட மாக பகிர, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் இந்தியா அணி, 5 விக்கெட்டுகள் இழப்புக்கு 336 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இதுவே பாகிஸ்தான் அணிக்கெதிராக இந்திய அணி நிர்ணயித்த மூன்றாவது அதிகபட்ச ஓட்ட எண் ணிக்கையாகும்.

2005ஆம் ஆண்டு விசாகப்பட்டினத்தில் வைத்து 9 விக் கெட்டுகள் இழப்புக்கு 356 ஓட்டங்கள் பெற்றதே சாதனை ஓட்ட எண்ணிக்கையாக உள்ளது.

இதன்போது விஜய் சங்கர் 15 ஓட்டங்களுடனும், கேதர் ஜாதவ் 9 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் இருந்தனர்.

பாகிஸ்தான் அணியின் பந்து வீச்சு சார்பில், மொஹமட் ஆமிர் 3 விக்கெட்டுகளையும், ஹசன் அலி மற்றும் வஹாப் ரியாஸ் ஆகியோர் தலா 1 விக்கெட்டினையும் வீழ்த்தினர்.

இப்போட்டியின் போது பாகிஸ்தான் அணியின் முன்னணி பந்து வீச்சாளர்களான மொஹமட் ஆமிர் மற்றும் வஹாப் ரியாஸ் ஆகியோருக்கு ஆடுகளத்தின் நடுப்பகுதியை பந்துவீசும் போது சேதப்படுத்தியதற்கான இரண்டு முறை எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனால் இன்னொரு முறை அதாவது மூன்றாவது முறையும் அவர்கள் எச்சரிக்கப்பட்டால், அவர்களுக்கு பந்து வீசுவதற்கு தடை விதிக்கப்பட்டிருக்கும்.

இதனைதொடர்ந்து, 337 என்ற வெற்றி இலக்கை நோக்கி களமிறங்கிய பாகிஸ்தான் அணி, நிதானமான இந்திய ஆரம்ப பந்து வீச்சாளர்களை எதிர்கொண்டது.

பும்ரா மற்றும் புவனேஸ்வர் குமார் சிறந்த லெந்துகளுடன் பந்து வீசிய போதும், பாகிஸ்தான் அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான இமாம் உல் ஹக் மற்றம் பகர் சமான் ஆகியோர் பந்துகளை நேர்த்தியாக எதிர்கொண்டனர்.

இந்த தருணத்தில் முதல் விக்கெட்டை எவ்வாறு தகர்த்தெறிவது என இந்தியா அணி யோசித்துக் கொண்டிருந்த போது, துரதிஷ்ட வசமாக மூன்றாவது ஓவரில் நான்காவது பந்தை வீசிய போது கால் தசைப்பிடிப்பு காரணமாக புவனேஸ்வர் குமார் மைதானத்தை விட்டு வெளியோறினார். ஆனாலும் எவ்வித அழுத்தங்களையும் எதிர்கொள்ளாத இந்தியா அணி, மீதமுள்ள இரு பந்துகளையும் ஹர்திக் பாண்ட்யாவிற்கு வீச வாய்ப்பு கொடுத்தது.

பின்னர் உடனே மாற்றம் மேற்கொள்ளப்பட்டு தமிழக வீரர் விஜய் சங்கருக்கு பந்து வீச கொடுக்கப்பட்டது. உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரின் தனது முதல் போட்டியில், முதல் பந்தை வீசிய விஜய் சங்கர், இமாம் உல் ஹக்கை எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டமிழக்க செய்து அரங்கில் கூடியிருந்த ஆயிரக்கணக்கான இரசிகர்களைக் கொண்டாட வைத்தார்.

இதனையடுத்து பகர் சமானுடன் ஜோடி சேர்ந்த பாபர் அசாம் சிறப்பான துடுப்பாட்டத்தை வெளிப்படுத்தினார்.

இருவரும் இணைந்து அணிக்காக சிறப்பான இணைப்பாட் டத்தை கொடுக்க அணியின் ஓட்ட எண்ணிக்கை, சிறந்த ஓவருக்கான சராசரியுடன் கூடியது.

இந்த இணைப்பாட்டத்தை பிரிக்க இந்தியா அணி கடுமை யாக போராடியது. இதன்பலனாக இருவரும் 104 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, குல்தீப் யாதவ் தனது சுழலில் பாபர் அசாமை சிக்க வைத்தார்.

பாபர் அசாம் 48 ஓட்டங்கள் பெற்றிருந்த வேளை போல்ட் முறையில் ஆட்டமிழந்து வெளியேற, அடுத்த ஓவருக்கு அடுத்த ஓவர் மற்றொரு துடுப்பாட்ட வீரரான பகர் சமானும் குல்தீப் யாதவ்வின் சுழலில் சிக்கினார். இதன்போது பகர் சமான் 62 ஓட்டங்களைப் பெற்றிருந்தார்.

இதனையடுத்து களமிறங்கிய அனுபவ வீரர் மொஹட் ஹபீஸ் 9 ஓட்டங்களுடன் ஏமாற்ற, அடுத்து களமிறங்கிய மற்றொரு அனுபவ வீரர் சொயிப் மலிக் முதல் பந்திலேயே ஆட்டமிழந்து வெளியேறினார்.

மறுமுனையில் அணித்தலைவர் சப்ராஸ் அஹமட் பந்துளை நிதானமாக கையாண்டு களத்தில் நின்றார்.

இதனையடுத்து களமிறங்கிய இமாட் வசிம், சப்ராஸ் அஹ மட்டுடன் ஜோடி சேர்ந்து 36 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை, இந்த இணைப்பாட்டமும் பிரிக்கப்பட்டது. இதன்போது சப்ராஸ் அஹமட் 12 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார்.

இதனைத் தொடர்ந்து இமாட் வசிம் மற்றும் சதாப் கான் ஆகியோர் இணைந்து 47 ஓட்டங்களை பெற்றிருந்த வேளை மழை குறுக்கிட்டது. இதன்போது, இமாட் வசிம் 46 ஓட்டங்களு டனும், சதாப் கான் 20 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருந்தனர்.

இப்போட்டியின் போது அவ்வப்போது மழைக் குறுக்கிட்ட போதும், பின்னர் போட்டி மீண்டும் நடத்தப்பட்டது. ஆனால் இறுதி யில் மழை விடாது தொடர்ச்சியாக பெய்ததால், வெற்றியை தீர் மானிப்பதற்கு டக்வத் லுயிஸ் முறையை போட்டி நடுவர்கள் தேர்வு செய்தனர்.

இதற்கமைய இந்தியா அணி டக்வத் லுயிஸ் முறைப்படி 86 ஓட்டங்களால் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

இந்த வெற்றியின் மூலம், இந்தியா அணி 7 புள்ளிகளுடன் புள்ளிபட்டியலில் மூன்றாவது இடத்திற்கு முன்னேறியது. மறு புறம் பாகிஸ்தான் அணி 3 புள்ளிகளுடன் 9ஆவது இடத்திற்கு பின்தள்ளப்பட்டது.

இதேவேளை உலகக்கிண்ண கிரிக்கெட் வரலாற்றில் தொடர்ச்சியாக ஓர் அணிக்கெதிராக பெற்றுக்கொண்ட அதிக வெற்றிகளாக இந்த வெற்றி பதிவானது.

உலகக்கிண்ண வரலாற்றில் இந்தியா அணி, பாகிஸ்தானை எதிர்கொண்ட 7 போட்டிகளிலுமே வெற்றிபெற்றுள்ளது.

கடந்த ஐ.சி.சி. சம்பியன் கிண்ணத் தொடரை போலவே இப்போட்டியிலும் பாகிஸ்தான் அணியின் வீரர்களான மொஹமட் ஆமிர் மற்றும் பகர் சமான் ஆகியோர் சிறப்பாக விளையாடினர்.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக 113 பந்துகளில் 3 சிக்ஸர்கள் 14 பவுண்ரிகள் அடங்கலாக 140 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்ட ரோஹித் சர்மா தெரிவு செய்யப்பட்டார்.

# வென்றது 'சுப்பர்ராங்' விளையாட்டுக்கழகம்

## வெற்றிக் கிண்ணத்தை வழங்கினார் சுமந்திரன் எம்.பி.








யாழ்ப்பாணம், ஜூன் 18

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக், வட மராட்சி கிழக்கு உதைபந்தாட்ட உப லீக் ஆகியவற்றின் அனுமதியுடன் ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் நடத் திய 'வடக்கு மாகாண ரீதியிலான விளையாட்டு விழா – 2019' நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது.

பிற்பகல் 2.30 மணிக்கு ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழக மைதா னத்தில் கழகத்தின் தலைவர் சே.ஜெயச்சந் திரன் தலைமையில் ஆரம்பமான இந்த நிகழ் வில், பிரதம விருந்தினராகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியு மான மதியாபரணம் ஆபிரகாம் சுமந்திரன் கலந்துகொண்டார்.

சிறப்பு விருந்தினர்களாக பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ.சா.அரியகு மார், மருதங்கேணி பிரதேசசெயலர் க.கனகேஸ் வரன், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான ச.சுகிர்தன், கே.சயந்தன் மற்றும் மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா ஆகியோர் கலந்து கொண்டனர்.


இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ரீதியில் நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டியின் இறுதிப் போட்டி இடம்பெற்றது.

புதுக்குடியிருப்பு சுப்பர்ராங் விளையாட்டுக் கழகமும் உடுத்துறை செந்தமிழ் விளை யாட்டுக்கழகமும் இறுதிப் போட்டியில் மோதின. சுப்பர்ராங் விளையாட்டுக்கழக அணி தண்ட உதை மூலம் வெற்றிபெற்றது.

முதலிடம் பிடித்த புதுக்குடியிருப்பு சுப்பர் ராங் விளையாட்டுக்கழக அணிக்கு நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் வெற்றிக்கிண்ணத்தையும், பணப்பரிசிலை யும் வழங்கினார்.

இரண்டாம் இடத்துக்கு வந்த உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக்கழக அணிக்கு நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்ட பருத்தித்துறை பிரதேச சபையின் தவிசாளர் அ.சா.அரியகுமார், மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ச.திரவியராசா ஆகியோர் இணைந்து கௌரவிப்புக் கிண் ணத்தையும் பணப்பரிசிலையும் வழங் கினர். (ஐ)

## இன்றைய ஆட்டம்




இங்கிலாந்து - ஆப்கானிஸ்தான்

பிற்பகல் 3 மணி



## கூட்டமைப்பின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாவை சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், எம்.ஏ.சுமந்திரன், த.சித்தார்த்தன் ஆகியோரே புதுடில்லி செல்வதற்குத் தயாராகியுள்ளனர் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

இதற்காக அவர்கள் விரைவில் கொழும்பில் கூடி சந்திப்புத் திகதி உட்பட பல விடயங்கள் குறித்துப் பேசவுள்ளனர்.

அண்மையில் கொழும்பு வந்த இந்தியப் பிரதமருடன் நடத்திய கலந்துரையாடலின்போது, தேசியப் பிரச்சினைக்குத் தீர்வு காண அவசரமாக அரசமைப்புத் திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இந்தியா தலையிட வேண்டும் என்று கூட்டமைப்பின் பிரதிநிதிகள் குழு சுட்டிக்காட்டியிருந்தது.

அரசமைப்புத் திருத்தங்கள் ஒரு சிக்கலான பிரச்சினை என்பதால் இந்த விவகாரத்தை ஆய்வு செய்த பின்னரே, அது குறித்து பார்க்கவேண்டும் என்று இந்தியப் பிரதமர் மோடி கூறியிருந்தார். டில்லி வருமாறும் கூட்டமைப்புக்கு அழைப்பு அவர் விடுத்திருந்தார்.

இதற்கமைய இந்தியப் பிரதமர் மோடியுடன் பேசுவதற்காக கூட்டமைப்பினர் விரைவில் புதுடில்லி பயணமாகவுள்ளனர். இதற்காக அவர்கள் கொழும்பில் கூடி சந்திப்புக்கான திகதி உள்ளிட்ட பல விடயங்கள் குறித்துப் பேசவுள்ளனர். (ஐ)

## வீடு புகுந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாய்ந்த பொருள்களை அடித்துச் சேதப்படுத்திவிட்டுத் தப்பித்துள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

ஆவா குழு உள்ளிட்ட வன்முறையாளர்களை நேரடிப் பேச்சுக்கு வருமாறு வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் அழைப்புவிடுத்திருந்த நிலையில் வன்முறைக் கும்பல் ஒன்று இந்தத் துணிகரத் தாக்குதலை முன்னெடுத்துள்ளது.

மோட்டார் சைக்கிள்களில் வாள்களுடன் வந்த கும்பல் ஒன்றே இந்த அட்டூழியத்தில் ஈடுபட்டுவிட்டுத் தப்பிச் சென்றுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்தில் வீட்டிலிருந்த தொலைக்காட்சி பெட்டி உள்ளிட்ட பெறுமதியான தளபாடங்கள் மற்றும் பொருள்கள் முற்றாகச் சேதமடைந்துள்ளன. எனினும் வீட்டிலிருந்தவர்கள் தெய்வாதீனமாகத் தாக்குதலிருந்து தப்பித்துள்ளனர்.

மானிப்பாய் செல்லமுத்து மைதானம் ஊடாக நேற்று மாலை 2 மோட்டார் சைக்கிள்களில் 4 பேர் வாள்களுடன் பயணிப்பதை அவதானித்த பொதுமக்கள், மானிப்பாய் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, கொக்குவில் ரயில் நிலைய அதிபர் மீது நடத்தப்பட்ட தாக்குதலையடுத்து ஆவா குழு உள்ளிட்ட வன்முறையாளர்களுடன் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின்றி எந்த இடத்திலும் பேச்சு நடத்த தான் தயார் என்று வடக்கு மாகாண ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவன் கடந்த வெள்ளிக்கிழமை அழைப்பு விடுத்திருந்தார்.

அவர் அழைப்புவிடுத்து மூன்று தினங்களுக்குள் பகல்வேளை வீதியால் பயணித்து இந்தத் தாக்குதலை வன்முறைக் கும்பல் ஒன்று முன்னெடுத்துள்ளது. (ஐ)

## தமிழரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாக இந்தச் சவாலுக்கு முகம் கொடுத்து தமிழ் மக்களின் இலக்கை நாம் அடைந்தே தீருவோம்.

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

ஆழியவளை அருணோதயா விளையாட்டுக்கழகம் நடத்திய வடக்கு மாகாண ரீதியிலான விளையாட்டு விழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை விளையாட்டுக்கழக மைதானத்தில் கழகத்தின் தலைவர் சே.ஜெயச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

தமிழ் மக்களின் அரசியல் பயணத்திலே பல வித்தியாசமான தசாப்தங்களைக் கடந்து வந்திருக்கின்றோம். ஆனால், இன்று நாங்கள் இருக்கின்ற சூழல் இதற்கு முன்னெப்போதும் இல்லாத சூழலாக இருக்கின்றது.

எங்களுக்கு உகந்த ஒரு சூழலை நாம் உருவாக்கி விட்டோம் என்று நினைத்திருந்த போது அந்தச் சூழலே எங்களுக்கு மாறானதாகவும், நாங்கள் சறுக்கி விழக்கூடியதாகவும், விழுந்தால் பாரிய காயம் ஏற்படக்கூடியதாகவும் இன்று எங்கள் முன்னால் இருந்து கொண்டிருக்கின்றது.

மிக நிதானமாக, மிக கவனமாக நாங்கள் எங்களது மக்களது நலன்களை முன்னிறுத்தி முன்னேற வேண்டிய காலமாக இது இருக்கின்றது.

விசேடமாக இந்த வருடத்தில் இவை எல்லாவற்றையும் சீர்தூக்கி ஆராய வேண்டும். எமது நீண்டகால இலக்குகளை அடைவதற்கான வழிகள் என்ன? பொதுமக்களினது நலன்களை அடைவதில் அவர்களுக்கு எப்படித் தலைமைத்துவம் கொடுக்க முடியும்? என்பது குறித்து சிந்தித்துச் செயலாற்ற வேண்டிய காலமாக இது இருக்கின்றது.

இது இலகுவான ஒரு சவால் அல்ல. முன்னெப்போதும் இல்லாத பலத்த சவால். இது கஷ்டம் என்று கைவிட்டுவிட்டு நாங்கள் ஓடிவிட முடியாது. நிச்சயமாக முகம் கொடுக்க வேண்டிய ஒரு சவாலாக இது இருக்கின்றது. எனவே, இந்தச் சவாலுக்கு முகம் கொடுத்து தமிழ் மக்களின் இலக்கை நாம் அடைந்தே தீருவோம்.

வாழ்க்கையில் தோல்வியைச் சந்திப்பது எப்படி, தோல்வியைக் கையாள்வது எப்படி, ஏமாற்றங்களுக்கு முகம் கொடுப்பது எப்படி என்பதை விளையாட்டுத்திடலில் தான் நாம் முதலில் கற்றுக் கொள்கின்றோம். வாழ்க்கையிலேயே பல தோல்விகளை நாம் சந்தித்தே ஆகவேண்டும். பல ஏமாற்றங்களுக்கு முகம் கொடுத்தே ஆகவேண்டும். அவை இறுதி முடிவாக இருக்கக்கூடாது. அந்தத் தோல்விகள், ஏமாற்றங்கள்தான் வெற்றிக்கான படிகளாக இருக்கவேண்டும். இறுதியில் நாம் வென்றே ஆகவேண்டும். எனவே, இன்றைய சூழ்நிலையிலே இளைஞர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் என்றுமில்லாத அளவுக்கு அத்தியாவசியமானவையாகும் – என்றார். (ஐ)

## அலரிமாளிகை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போதைய அரசியல் நிலைவரம் குறித்து இங்கு விரிவாகப் பேசப்பட்டது.

குறிப்பாக – பதவி விலகிய முஸ்லிம் அமைச்சர்களுக்குப் பதிலாக பதில் அமைச்சர்கள் மூவரை ஜனாதிபதி நியமித்துள்ள விவகாரம், நாடாளுமன்றத் தேர்தலுக்கான சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பான ஜனாதிபதியின் உத்தேசத் திட்டம் உட்பட்ட பல விடயங்கள் இதன்போது ஆராயப்பட்டுள்ளன. (ஐ)

## பெறாமகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மடைந்த நிலையில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூரச் சம்பவத்தை அரங்கேற்றியவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் கத்தியுடன் சரணடைந்தார்.

இருபாலையைவி சேர்ந்த பாலசிங்கம் பரிதா (வயது–30) என்பவர் உயிரிழந்தார். பாலசிங்கம் ஜெயபாலன் (வயது–35) என்பவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலை கந்தேவேள் பாடசாலைக்கு முன்பாக நேற்று முற்பகல் இடம்பெற்றது.

காணிப் பிணக்கு காரணமாக உறவினர்களான அயலவர்கள் இருவருக்கு இடையே நீண்டகாலமாகப் பிணக்குக் காணப்பட்டது.

அதனைச் சாட்டாக வைத்துப் பெரிய தந்தையாரான வேலன் கிருஸ்ணன் (வயது – 60) கத்தியுடன் சென்று கந்தேவேள் பாடசாலைக்கு முன்பாக வைத்து பெறாமகனான ஜெயபாலனின் வயிற்றில் குத்தியுள்ளார். அவர் நிலத்தில் சரிந்து வீழ்ந்தார்.

அதனால் கத்தியால் குத்தியவர் சைக்கிளை எடுத்துக் கொண்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்துக்குப் புறப்பட்டுள்ளார். வழியில் பெறாமகளைக் கண்டுள்ளார். அவரையும் கத்தியால் குத்த முற்பட்டபோது, அந்தப் பெண் பெரிய தந்தையாரை வீதியில் தள்ளி வீழ்த்திவிட்டுத் தப்பி ஓடியுள்ளார்.

ஆயினும் பெரியதந்தையார் பெண்ணை விடாமல் துரத்திச் சென்றுள்ளார். ஓடிச் சென்ற அந்தப் பெண் தடுமாறி வீதியில் சரிந்து வீழ்ந்துள்ளார். அதன்போது அவரைக் கழுத்து அறுத்து பெரியதந்தையார் கொலை செய்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ–07)

## சு.க. - பெரமுன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆறாம் சுற்று பேச்சு அடுத்த புதன்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இதன்படி எதிர்வரும் 26 ஆம் திகதி மாலை 4 மணிக்குக் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இந்தச் சந்திப்பு நடைபெறும் எனப் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தெரிவித்தார்.

புதிய அரசியல் கூட்டணி அமைப்பது தொடர்பில் இரு கட்சிகளுக்குமிடையிலான ஐந்தாம் சுற்று கலந்துரையாடல் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் கடந்த 7 ஆம் நடைபெற்றது.

அடுத்த சுற்று பேச்சு நேற்று நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்த நிலையிலேயே திடீரெனப் பிற்போடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும், பொதுஜன பெரமுனவுக்குமிடையில் ஏற்பட்டுள்ள முறுகல் காரணமாகவே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டுள்ளது என அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. (ஐ)

## விக்கியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டனும் அவரது கட்சியுடனும் இணைந்துசெயற்படுவதில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கோ அந்தக் கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்துக்கோ எந்தப் பிரச்சினையும் இல்லை. விக்கினேஸ்வரனுடனும் அவருடைய கட்சியுடனும் சேர்ந்து செயற்பட நாங்கள் தயாராகவே இருக்கின்றோம்.

– இவ்வாறு கூறியிருக்கிறார் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன்.

ஆனால் கடந்த காலங்களில் தமிழ் மக்களின் நலன்களை வேறு சக்திகளுக்குப் பலியிட்ட தரப்புக்களுடன் இணைந்து செயற்படுவதிலோ அல்லது அவர்களையும் இணைத்துக் கொள்வதிலோ எந்தவித பிரயோசனமும் இல்லை. ஆகையால் அவ்வாறான தரப்புக்களுடன் நாங்கள் சேர்ந்து பயணிக்கமுடியாது. இதனையே தெளிவாகக் கூறிக் கொள்ள விரும்புகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

கொக்குவிலில் உள்ள அவரது கட்சி அலுவலகத்தில் நேற்று மாலை நடத்திய ஊடக சந்திப்பின் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் முன்னாள் நீதியரசர் விக்கினேஸ்வரனும் எமது கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் உரையாற்றியிருந்தார்கள். அந்த இடத்தில் தானும் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் இணைந்தால் சாதிக்க முடியாததொன்றுமில்லை என்றும், அவருடைய முன்னேற்றத்தில் தனக்கு அக்கறை இருக்கிறது என்றும் நீதியரசர் விக்கினேஸ்வரன் கருத்துக்களை அவர் முன்வைத்திருந்தார்.

அதன் பின்னர் உரையாற்றிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தனது உரையில், தனக்கோ தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கோ விக்கினேஸ்வரன் ஐயாவுடன் சேர்ந்து செயற்படுவதில் மிகுந்த ஈடுபாடு இருக்கிறதென்றும் அதற்கு எந்தவிதமான தடைகளும் இல்லை என்றும், நாங்கள் சேர்ந்து செயற்படத் தயாராக இருக்கிறோம் என்பதையும் தெளிவாக எடுத்துக் கூறியிருக்கின்றார்.

அதேநேரத்தில் நாங்கள் ஒன்று சேர்ந்து தமிழ் மக்களின் நலன்களுக்காகப் பேரம் பேச வேண்டிய இடங்களில் பேரம் பேசவேண்டும். அவ்வாறு பேரம் பேசுவதற்கு ஒத்துழைக்கக் கூடியவர்களோடுதான் சேர்ந்து பயணிக்கவேண்டுமே தவிர அதைக் குழப்பக் கூடியவர்களோடு நாங்கள் சேர்ந்து பயணிக்க முடியாது என்பதையும் மிகத் தெளிவாகக் குறிப்பிட்டிருந்தார்.

அதாவது அரசியல் கட்சி என்ற அடிப்படையில் விக்கினேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணியுடன் சேர்ந்து செயற்பட முடியுமென்பதையும் அதே நேரம் ஏற்கனவே தமிழ் அரசியலில் பிரதிநிதிகளாக இருந்துகொண்டு இந்தியா, மேற்கு நாடுகளின் எடுபிடிகளாக இருந்து தமிழ் மக்களின் நலன்களைப் பலியிடும் தரப்புக்களை இதற்குள் சேர்த்துத் தோல்வியடைக் கூடாதென்பதையும் குறிப்பிட்டிருந்தார்.

ஆகவே அங்கே உரையாற்றியவர்களால்கூட கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் விக்கினேஸ்வரனும் இணைய வேண்டுமென்ற அடிப்படையில் தான் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டிருந்தன. அதேநேரம் வேறு யாரும் இணைய வேண்டுமென்ற வகையில் கருத்துக்கள் முன்வைக்கப்படவில்லை. அந்த அடிப்படையில் தான் விக்கினேஸ்வரன் ஐயாவுடன் சேர்ந்து செயற்படுவதில் எந்தவிதமான பிரச்சினைகளும் இல்லை என்றும் ஆனால் கடந்த காலத்தில் இந்த அரசியல் பரப்பில் இருந்து கொண்டு தமிழ் மக்களின் நலன்களை வேறு சக்திகளுக்காக பலியிட்டவர்களை சேர்த்துக்கொள்வதில் பயனில்லை என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இது தான் கட்சியின் நிலைப்பாடு. அதில் எந்தவிதமான மாற்றங்களும் இல்லை. இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் அங்கே சில ஊடகங்களின் முக்கியஸ்தர்கள்கூட அங்கு இருந்தபோதிலும் விக்கினேஸ்வரன் ஐயாவுடைய கருத்துக்கள் ஊடகங்களில் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றபோதிலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கருத்துக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசுரிக்கப்படவில்லை என்பது மிகுந்த வேதனைக்குரிய விடயம்.

எங்கள் தரப்பு நியாயங்களை மறைத்து ஊடகங்கள் ஏன் செயற்படுகின்றதென்பது தெரியவில்லை. ஊடகங்களின் அத்தகைய செயற்பாடுகள் எங்களுக்கு மிகவும் ஏமாற்றமளிக்கின்றன. கட்சி அரசியலுக்கு அப்பால் எங்கள் இனத்தின் நலன்களுக்காக நாங்கள் எடுக்கின்ற முடிவுகளை உள்ளதை உள்ளவாறானதாக ஊடகங்கள் வெளிப்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றோம் – என்றார். (ஐ–07)

## பரபரப்புக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதிக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இன்று முற்பகல் கட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெறவுள்ளது.

சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் நடைபெறும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில், நாடாளுமன்றத் தெரிவுக்குழு குறித்து கூட்டு எதிரணி கேள்வி எழுப்பும் எனத் தெரியவருகின்றது.

அதேவேளை, நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் நாடாளுமன்றக் குழுக் கூட்டங்களும் கொழும்பில் நடைபெறவுள்ளன. இதன்போது சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பில் விரவாக ஆராயப்படவுள்ளன.

அத்துடன், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் இன்று அமைச்சரவைக் கூட்டமும் நடைபெறவுள்ளது. (ஐ)

## வேளாங்கண்ணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தச் சம்பவம் மணியந்தோட்டம், உதயபுரம் கடற்கரை வீதியில் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை ஒரு மணிக்கு அந்தப் பகுதியால் கடற்தொழிலுக்குச் சென்றவர்கள் மாதா சொரூபம் இருந்ததைக் கண்டுள்ளனர். அதனால் அதன் பின்னரே அது உடைக்கப்பட்டிருக்கவேண்டும் என்று நம்பப்படுகிறது.

மாதா சொரூபம் அமைந்துள்ள இடத்தில் வாகனம் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததைக் கடலில் தொழிலில் ஈடுபட்டிருந்தவர்கள் தூரத்திலிருந்து அவதானித்துள்ளனர் என்றும் பொலிஸார் கூறினர். சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ – 07)

# மஹிந்த இருக்கும்வரை கோட்டா ஜனாதிபதியாக வரவே முடியாது!

## அடித்துக் கூறுகிறார் அமைச்சர் ராஜித



கொழும்பு, ஜூன் 18

மஹிந்த ராஜபக்ஷ இருக்கும் வரை கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதிப் பதவிக்கு வருவதற்குச் சந்தர்ப்பமே கிடைக்காது என அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

2015ஆம் ஆண்டு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தேர்தலில் வெற்றி பெற்ற பின்னர் மஹிந்த ராஜபக்ஷ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை ஏற்றுக் கொள்ளுமாறு மைத்திரியிடம் கூறினார். அப்போது நாங்களும் அதனை ஏற்றுக்கொள்ளுமாறு கூறினோம்.மைத்திரிபால அதனை ஏற்றுக் கொண்ட பின்னர் நாங்கள் எதிர்பார்த்த அரசியல் பயணம் முற்றாக மாற்றமடைந்தது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவர் என்ற காரணத்தினால் ஜனாதிபதிக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியினரைப் போன்று செயற்பட நேரிட்டது.

விருப்பமிருந்ததோ, விருப்பமில்லையோ ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியைப் பாதுகாக்கவேண்டிய நிலை அவருக்கு ஏற்பட்டது. ஜனாதிபதிக்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராகுவதற்கு ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு விருப்பம் இருந்தாலும் அவர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினரைப் போன்று செயற்பட ஆரம்பித்த தருணத்திலிருந்தே முறுகல் நிலைமை தொடங்கிவிட்டது.

எதிர்வரும் தேர்தலில் கோட்டாபய களமிறங்குவது என்பது ஒருபோதும் நடக்காது. மஹிந்த இருக்கும் வரை அந்தச் சந்தர்ப்பம் கிடைக்காது. கோட்டாபய அவர் மீது தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகளுக்கு நீதிமன்றத்துக்குக் கொடுக்கும் அழுத்தமாகவே இவ்வாறான பிரசாரங்களை முன்னெடுத்துச் செல்கின்றார்.

இருப்பினும் அவர் போட்டியிட்டாலும் அவருக்கு இருக்கும் இனவாதத்தினால் அவரால் வெற்றி பெற முடியாது – என்றார். (ஐ)

# சிகரெட் இறக்குமதிக்கு அனுமதிக்கமாட்டேன்!

## மங்களவுக்கு ராஜித எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 18

நான் சுகாதார அமைச்சராக இருக்கும் காலம் வரை வெளிநாட்டு சிகரெட்களை இறக்குமதி செய்ய ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

உலகப் புகையிலை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட நிதி அமைச்சர் மங்கள சமரவீர, வெளிநாட்டு சிகரெட்டுக்களை இறக்குமதி செய்ய நிதியமைச்சு அனுமதி வழங்கியுள்ளதாகக் கூறியிருந்தார்.

இலங்கையில் சீன சேவையாளர்களே அதிகம் இருப்பதாகவும் குறிப்பிட்ட மங்கள சமரவீர, சீன சிகரெட் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன,

வெளிநாடுகளிலிருந்து சிகரெட்டுக்களை இறக்குமதி செய்வதற்கு தேவையான சட்டங்களை நிதியமைச்சர் மங்கள சமரவீர தயாரித்தால் அவருக்கு எதிராகத் தீர்மானமொன்றை எடுக்க நேரிடும் என எச்சரிக்கை விடுத்தார்.

அத்துடன் அமைச்சரவையில் தான் இருக்கும் வரை மங்களவின் இத்தகைய யோசனையை நிறைவேற்றுவதற்கு ஒருபோதும் இடமளிக்க போவதில்லை எனவும் அவர் மேலும் கூறினார்.

# ஜீவனி குடித்து உண்ணாவிரதம் இருந்த அத்துரலிய ரத்ன தேரர்!

## அவருக்குக் கோட்டாவுடன் தொடர்பு என்கிறார் முன்னாள் ஆளுநர் அசாத் சாலி

கொழும்பு, ஜூன் 18

உண்ணாவிரதம் என்ற போர்வையில் ஜீவனியை குடித்துக் கொண்டிருந்த ரத்ன தேரருக்கும் கோட்டாபயவுக்கும் தொடர்பு உள்ளது.

காவித் தீவிரவாதமே இப்போது நாட்டில் இருக்கிறது என மேல் மாகாண முன்னாள் ஆளுநர் அசாத் சாலி தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில் –

கட்டளைக்கு இணங்கவே ஊர்வலம் சென்றார்கள். இலங்கை முஸ்லிம்கள் வரலாற்றில் முதன் முதலாக ஆண், பெண்,பிள்ளைகள்எனஅனைவரையும் வீதிக்கு இறக்கி சீரழித்தவர்கள் தான் இந்த தௌஹீத் ஜமாத் அமைப்பு .



தெரிவுக் குழு முன்னிலையில் அஸாத் சாலி காட்டிக் கொடுத்து விட்டார் என நினைப்பார்கள். ஆனால் நான் யாரையும் காட்டி கொடுக்கவில்லை. கள்வனைக் கள்வன் என்றும் தீவிரவாதியைத் தீவிரவாதி என்றும் வெளிப்படையாகக் கூறியுள்ளேன்.

தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புக்கும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் தொடர்புள்ளது. கோட்டாபய ராஜபக்ஷ தேசிய தௌஹீத் ஜமாத் அமைப்புடன் தொடர்பைப் பேணியதற்கான நோக்கம் எதுவாக இருந்திருக்கலாம்?முஸ்லிம்களை பிரிக்கவேண்டும் என்பதே இவர்களின் நோக்கம்.

இப்போது முஸ்லிம் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து பதவி விலகியதே இந்த நாட்டில் பிரச்சினையாக இருக்கின்றது. இவர்கள் எதிர்பார்க்கவில்லை. உண்ணாவிரதம் என்ற போர்வையில் ஜீவனியை குடித்துக் கொண்டிருந்த ரத்ன தேரருக்கும் கோட்டாபயவுக்கும் தொடர்பு உள்ளது. அவசர காலச் சட்டம் அமுலில் இருக்கும்போது எவ்வாறு உண்ணாவிரதம் இருக்க முடியும். ஏன் நீதியை நிலை நாட்டவில்லை – என்றார். (ஐ)

# நாடாளுமன்றத் தேர்தல் குறித்து மைத்திரி பேசியதே கிடையாது

## கூறுகிறார் லக்ஷ்மன் கிரியெல்ல

கொழும்பு, ஜூன் 18

நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவது தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால, ஐக்கிய தேசியக் கட்சியுடன் எந்தப் பேச்சுக்களையும் நடத்தவில்லை என அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

பிரதமருக்கும், ஜனாதிபதிக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் முற்றியுள்ளதாலும், அரசைக் கொண்டு நடத்த முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளதாலும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவது குறித்து ஜனாதிபதி கலந்தாலோசித்து வருகிறார் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதிக்கு உள்ள நிறைவேற்று அதிகாரத்தின் பிரகாரம் நாடாளுமன்றத் தேர்தலை முன்னதாக நடத்துவதற்கான சர்வஜன வாக்கெடுப்பொன்றை நடத்த ஜனாதிபதி ஆலோசித்துள்ளாரென செய்திகள் வெளியாகியிருந்தன.

இது குறித்து கருத்து வெளியிட்ட அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல, ஐ.தே.கவிடம் இது குறித்து ஜனாதிபதி எவ்வித கலந்துரையாடல்களையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவித்தார்.



அத்துடன், சர்வஜன வாக்கெடுப்பு தொடர்பில் எவ்வித அறிவிப்புகளை ஜனாதிபதி நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கவில்லை. அத்தகைய எண்ணம் இருக்குமாயின் அதனை ஜனாதிபதியே வெளிப்படுத்த வேண்டுமெனவும் அவர் கூறினார். (ஐ)

# சர்வஜன வாக்கெடுப்புக்கு இடமளிக்கவேமாட்டோம்

## மஹிந்த தரப்பு விடாப்பிடி

கொழும்பு, ஜூன் 18

நாடாளுமன்றத் தேர்தலை முன்கூட்டியே நடத்துவதற்காகச் சர்வஜன வாக்கெடுப்பை நடத்த ஜனாதிபதி ஆலோசித்து வருகிறார் என வெளியாகியுள்ள செய்தியை ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த அமரவீர மறுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைமையிலான அரசுக்கும் ஜனாதிபதிக்கும் இடையில் கருத்து முரண்பாடுகள் முற்றியுள்ளதாலும், நாடாளுமன்றச் செயற்பாடுகள் ஜனாதிபதியின் உத்தரவை மீறி நடைபெறுவதாலும் ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்த ஜனாதிபதி ஆலோசித்து, அதற்காகச் சர்வஜன வாக்கெடுப்பை நடத்துவது குறித்து ஆலோசித்து உள்ளார் எனச் செய்திகள் வெளியாகியிருந்தன.

இவ்வாறு வெளியாகியுள்ள செய்திகளில் எவ்வித உண்மையும் இல்லையெனவும் ஜனாதிபதிக்கு அவ்வாறான எந்தவொரு எண்ணமும் கிடையாது எனவும் மஹிந்த அமரவீர கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில் –

சர்வஜன வாக்கெடுப்பு குறித்து வெளியாகியுள்ள தகவல்கள் பொய்யானவை. அவ்வாறான அவசியமொன்று ஏற்படவில்லை. தேவையில்லாது சர்வஜன வாக்கெடுப்பை நடத்தி மக்கள் பணத்தை நாசமாக்கும் எண்ணம் ஜனாதிபதிக்கு இல்லை. அதற்கு நாங்கள் இடமளிக்கவும் மாட்டோம். மாகாண சபைத் தேர்தலை நடத்தும் எண்ணம் ஐ.தே.கவுக்கு இல்லை. ஆகவே, முதலில் ஜனாதிபதித் தேர்தலே நடத்த வாய்ப்புள்ளது – என்றார். (ஐ)


# முதலீட்டாளர் கருத்துக்களம் – யாழ்ப்பாணம்

எதிர்வரும் ஜூன் 22 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9.30 மணி முதல் 11.30 வரை

Tilko Jaffna City Hotel - Jaffna

அனுமதி இலவசம்

பங்குச் சந்தை முதலீட்டு நிபுணர்களின் கருத்துப் பரிமாற்றங்களுடன் கூடிய முதலீட்டு ஆலோசகர்கள் சந்திப்பு.

முன் பதிவுகளுக்கு :-
021 2221455
0777822014
0777105205

CSE
கொழும்பு பங்குப்பரிவர்த்தனை
செல்வம் மற்றும் வெகுமதியின் பிறப்பிடம்


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி அவர்களது அச்சகத்தில் 18.06.2019 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.